Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :82 மாசி 07ஆம் நாள் புதன்கிழமை 19 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மயங்கி வீழ்ந்தவர் சாவு

சாவகச்சேரி, பெப். 19
கிணற்றில் குளிக்கச் சென்ற முதியவர் மயங்கி வீழ்ந்து சாவடைந்தார். இந்தச் சம்பவம் 25 ▶

## கொட்டன்களுடன் மூவர் கைது

மானிப்பாய், பெப்.19
தாக்குதலுக்குத் தயாராக இரும்பு பொருத்தப்பட்ட கொட்டன்களுடன் நின்ற மூவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 25 ▶

## புலிகளின் இலட்சியமே கூட்டமைப்பின் இலக்கு!

### அரசு கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 19
"இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே அரசிய 27 ▶

## சனத்தொகையில் சிங்கள, முஸ்லிம் யாழில் சரிவு!

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் முஸ்லிம், சிங்களவர்களின் எண்ணிக்கை குறைவ 25 ▶

முச்சந்தி முரளி




## பருத்தித்துறையில் 2 கைக்குண்டுகள் நேற்று மீட்பு

வடமராட்சி, பெப். 19
வடமராட்சி பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகேயுள்ள காணியில் இரண்டு கைக்குண்டுகள் நேற்று அடையாளங்காணப்பட்டுள்ளன.
காணியைத் துப்புரவு செய்தவர்கள் அதைக் கண்டுள்ளனர். தகவல் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அங்குவந்த பொலிஸார் அந்த இடத்தைப் பாதுகாப்புப் பகுதியாக அடையாளப்படுத்தினர். 26 ▶

# பொறுப்புக் கூறாமல் தப்பிக்க முடியாது!

### அரசுக்கு நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி எச்சரிக்கை



கொழும்பு, பெப்ரவரி 19
இலங்கை அரசு பொறுப்புக்கூறலில் இருந்து தப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் இலங்கையைச் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்படும் நிலைக்கே இட்டுச்செல்லும் என்று அரசை எச்சரித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன். 25 ▶

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை திருப்தி இல்லை

### கொழும்பு பேராயர் பகிரங்கமாகத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19
"உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் திருப்திப்படும் வகையில் இல்லை" என்று கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். 26 ▶

## வெற்றிலையில் கண்வைக்கும் சு.க!

கொழும்பு, பெப். 19
"எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. ஆயினும் அது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை" என்று இராஜாங்க அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்பொதுச் 27 ▶

## ஜெனிவாவை இலக்குவைத்தே இராணுவத் தளபதிக்குத் தடை

### இலங்கை அரசு குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19
"ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான கூட்டத் தொடரை இலக்காகக் கொண்டே இலங்கை இராணுவத் தளபதி லெப்டி 25 ▶

## கிணற்றுக்குள் ஆணின் சடலம்

### புங்குடுதீவில் பரபரப்பு

புங்குடுதீவு, பெப்.19
புங்குடுதீவில் கிணறு ஒன்றில் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் இனம்காணப்பட் 26 ▶

## மாணவர்களுக்கு போதைப்பாக்கு

### யாழ்.நகரில் கண்டறிவு வர்த்தகர் சிக்கினார்

27 ▶

# தமிழரின் கோரிக்கை நியாயமானவையே

### சம்பந்தனின் நிலைப்பாட்டையும் வரவேற்கிறது பிரிட்டன்

கொழும்பு, பெப். 19
இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வழங்குகின்ற பங்களிப்பு பாராட் 26 ▶



# குற்றவாளிகளை கண்டறிய சிறப்பு நீதிமன்றம்

## கோப் குழுவின் தலைவர் சபையில் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

மத்திய வங்கி முறிகள் மோசடி தொடர்பான குற்றவாளிகளைக் கண்டறிவதற்காக சுயாதீன நீதிமன்றமொன்றை நிறுவுமாறு கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

முறிகள் விநியோகம் தொடர்பிலான தடயவியல் கணக்காய்வு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சாட்சியங்களின் உண்மைத்தன்மை, சாட்சியங்களை முன்வைக்கும் கணக்காய்வாளர்களின் உண்மைத் தன்மை, அவர்களின் தகைமை தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டிய இடம் நீதிமன்றமே .

2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நாணய சபை நேரடிக் கொள்வனவு நடைமுறையை பின்பற்றியது. ஏல நடைமுறை 2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே கணக்காய்வாளர்கள் இந்தக் காலப்பகுதியை இரண்டாகப் பிரித்துள்ளனர்.

அரசுக்கும் மத்திய வங்கிக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த கொடுக்கல் வாங்கல் ஊடாக சந்தை செயற்பாடுகளுக்கும் நாட்டின் வட்டி வீதத்துக்கும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

அரச நிதி நிர்வாகத்தில் பேணப்படக்கூடாத உறவுமுறை மீதான கரிசனை மற்றும் அதிகாரிகளின் தலையீடு என்பன இந்த முறிகள் விநியோகத்தின்போது காணப்பட்டமை உறுதியாகியுள்ளது. ஆகவே, இந்த நாடாளுமன்றில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கை தொடர்பில நாடாளுமன்றில் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியவர்கள் உடனடியாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு நாட்டு மக்கள் சார்பில் அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அரசு இழந்த பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றும் அவர் கூறினார். (த-44)

ரஞ்சன் லீக்ஸ்

# 19 குரல் பதிவுகள் சபையில் சமர்ப்பிப்பு

## அவற்றைப் பகிரங்கப்படுத்துவதில் ஆளும், எதிர்க்கட்சிகள் முரண்பாடு

கொழும்பு, பெப். 19

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவால் 19 குரல் பதிவுகள் அடங்கிய இறுவெட்டு கடந்த 27 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடியபோது, சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

ரஞ்சன் ராமநாயக்கவால் ஜனவரி 27ஆம் திகதி மாலையே 19 குரல் பதிவுகள் அடங்கிய இறுவட்டு சமர்பிக்கப்பட்டிருந்தது. அதிலுள்ள குரல் பதிவுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு உறுப்பினர்கள் சிலர் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டத்தில், இது தொடர்பாக கட்சித் தலைவர்களுக்கு தெளிவுபடுத்திய பின்னர், எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய குரல் பதிவுகளின் உள்ளடக்கங்கள் சிலவற்றை செம்மைப்படுத்துவதற்காக நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சபையில் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சம்பிரதாயங்கள் மற்றும் நடைமுறைகள் உள்ளன.

குறிப்பாக ஏதேனும் ஆவணம் சபாபீடத்தின் அனுமதி வழங்கப்படுமாக இருந்தால் மட்டுமே சபையில் சமர்பிக்கப்படும். அத்துடன் அந்த ஆவணம் நாடாளுமன்ற உறுப்பினர் கூறும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அதனைச் சபையில் சமர்ப்பிக்கும்போது அந்த ஆவணம் மேசையில் வைக்கப்பட வேண்டும். அந்த ஆவணத்தை செம்மையாக்குவது நாடாளுமன்றத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு முறை அல்ல.

இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்டிப்பான கோரிக்கைகள் காரணமாகவும் மற்றும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமையவும் இந்தக் குரல் பதிவுகளில் காணப்படும் விடயங்களை செம்மயாக்கிய பின்னர் அவற்றை வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்தத் தீர்மானம் வேறு ஆவணங்களைச் சமர்ப்பிக்கப்படும்போது முன்மாதிரியான ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது." என்றார்.

எனினும், குரல்பதிவுகளை வெளியிட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அவை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று எதிரணி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை, ரஞ்சன் ராமநாயக்க வழங்கிய இறுவெட்டை பகிரங்கப்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-44)

# தடை மட்டுமே போதுமானதல்ல

## சிவாஜிலிங்கம் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 19

இராணுவ தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா, அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளமை மாத்திரம் போதுமானதல்ல. போர் குற்றங்கள், மனித உரிமைகளை மீறி எமக்கு செய்த அநியாயத்துககுச் சர்வதேச நீதிபதிகள் அடங்கிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னால் நியாயமான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை விதித்து நீதியை நிலைநாட்ட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, இலங்கை சம்பந்தமாக பொறுப்பை, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஊடாக, பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குற்றச் சாட்டுக் களை விசாரிக்க வேண்டும். போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், பலவந்தமாகக் காணாமல்போகச் செய்தமை போன்ற பல குற்றங்களைச் செய்துள்ளனர்.

தற்போதைய இராணுவத் தளபதியே இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தார். போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இலங்கை அரசு மேற்கொண்ட தமிழ் இன அழிப்புக்கு நியாயம் கிடைக்கவில்லை.

இலங்கை அரசின் அனுசரணையில் இராணுவம் செய்த இந்த குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிபதிகள் அடங்கிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி நீதி வழங்குமாறு கடந்த 10 ஆண்டுகளாக சர்வதேசத்தை வலியுறுத்தி வருகின்றோம். இலங்கை அரசிடம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற எவ்வித நம்பிக்கையும் இல்லை.

இராணுவ தளபதி சவேந்திர சில்வா, அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவர் மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான சாட்சியங்களை அடிப்படையாக கொண்டே இந்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. - என்றார். (த)

# பெரமுன சார்பில் டில்சான்



கொழும்பு, பெப். 19

நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் முன்னணியின் சார்பில் முன்னாள் கிரிக்கெட் வீரர் டில்சான் காலி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். இதனை அவர் நேற்றுமுன்தினம் உறுதி செய்துள்ளார்.

அதேவேளை முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் சகோதரர் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவார் என அறிவித்துள்ளார். (ம)



# எரிபொருள் வாகனம் மோதி லான்ட்மாஸ்டர் சாரதி காயம்

கிளிநொச்சி. பெப். 19

கிளிநொச்சி பரந்தன் ஏ9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் லான்ட் மாஸ்டர் சாரதி படுகாயமடைந்தார்.

எரிபொருள் தாங்கி வாகனமும் மோதுண்டதில் லான்ட் லான்ட்மாஸ்டர் சாரதி படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த)

சம்பத்
# சமாச்சாற

அரச ஓய்வூதியம் பெறுநர் கடன் திட்டம்



## அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் உங்கள் கடமைகள் இன்னும் எஞ்சியிருக்கலாம்.

அதனால்தான், அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உங்களுக்கு, சம்பத் சமாச்சாற ஓய்வூதியதாரர்களுக்கான கடன் திட்டத்தை வழங்குகிறோம்.

- 3 மில்லியன் ரூபா வரை கடன் தொகை
- 75 வயது வரை
- குறைந்த வட்டி வீதம்
- 10 வருடங்கள் வரையான மீள் செலுத்தும் தவணை
- ஒரே நாளில் கைக்கு பணம்
- பிணை நிற்பவர்கள் அவசியம் இல்லை

உங்கள் ஓய்வூதிய கணக்கை இன்றே சம்பத் வங்கிக்கு மாற்றிடுங்கள்.
வாழ்வின் அழகிய நாட்களை வாழத் தொடங்குங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

மேலதிக விபரங்களுக்கு 0112 30 30 50 அல்லது அருகிலுள்ள சம்பத் வங்கிக்கு வாருங்கள்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

www.sampath.lk

DentsuGrant

# அபான்ஸ்

## கையிருப்பு அகற்றல்

## பிரம்மாண்ட சேல்



## பெப்ரவரி 20 முதல் 29ஆம் திகதிவரை நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் ஹீரோ காட்சியறைகளில்.




# 50% வரை தள்ளுபடி

ரூ. 1,500 இலிருந்து

011 5 999 000

Abans

# தரகர்களிடம் ஏமாறவேண்டாம்

## யாழ். பிரதேச செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு வரும் பொதுமக்கள் தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாறாது நேரடியாக பிரதேச செயலகத்துக்கு வந்து அதற்கான விண்ணப்படிவத்தை உரிய கிளையில் இலவசமாகப் பெற்று சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவம் நிரப்ப முடியாதவர்களுக்கு எமது செயலக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அதற்கான கருமபீடம் திறக்கப்பட்டு விண்ணப்பப்படிவங்களை நிரப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-5)

# ஜேர்மன் கலாசார நிலையம் யாழ்ப்பாணத்தில் திறப்பு



கொழும்பு, பெப். 19

கொழும்பில் அமைந்துள்ள ஜேர்மன் கலாசார நிலையமான 'ஹோத்தே இன்னிஸ்ரிரியூட்' நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கும் தனது சேவையை விரிவாக்கும் பொருட்டு 'யாழ்ப்பாணச் செயற்றிட்ட அலுவலகம்' ஒன்றை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறந்துவைத்துள்ளது.

இல.20. கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 'கலம்' என்னும் பெயரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதில் ஜேர்மனிய மொழி, மற்றும் கலை நடவடிக்கைகளை முன்னெடுத்து வளர்ந்து வரும் கலைஞர்களுக்கான களமாக இயங்குவதோடு பரிசோதனை ரீதியான கலைமுயற்சிகளையும் முன்னெடுக்கும். அது மட்டுமல்லாது இலங்கைக் கலைஞர்களை ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய கலைஞர்களோடு இணைப்பதற்கான பாலமாகவும் அது அமையும் என்றும் அதன் பொறுப்பதிகாரி ஜே.எம்.கே. நிக்லஸ் தெரிவிக்கிறார். (து)

**பாதுகாப்பு சேவைக்கு வேலையாள்கள் தேவை**

கந்தானை, ஒருகொடவத்தை, நுகேகொட, கோமாகம, தெஹிவள போன்ற இடங்களுக்குத் தேவை.

**OIC - 1100    JSO - 1000**

தங்குமிடம், சாப்பாடு குறைந்த விலையில் தரப்படும்.

**076 632 0175, 076 810 2975**

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் இயங்கும்
**K.Kapinaya Engineering (pvt)Ltd**
நிறுவனத்துக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.

| | | |
|---|---|---|
| லேபர் | சம்பளம் | - 55000.00 |
| பெயின்ரர் | சம்பளம் | - 75000.00 |
| எலக்ரீசியன் | சம்பளம் | - 75000.00 |

**077 550 1520, 077 712 9690, 077 045 5044**

# நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றுகின்றார் கோத்தா!

## ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகின்றது

கொழும்பு, பெப். 19

"ஜனாதிபதித் தேர்தலில் நம்பி வாக்களித்த நாட்டு மக்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏமாற்றி வருகின்றார்" என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய பாதுகாப்பைப் பெரிதும் வலியுறுத்திய ஜனாதிபதி தற்போது பாதுகாப்பு அமைச்சர் ஒருவரைக்கூட நியமிக்க முடியாதுள்ளார். இவ்வாறான நிலையில் நாட்டின் தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

ஜானதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றது முதல் தற்போது வரை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. மக்களுக்கு மேலதிக நெருக்கடி நிலைமையே உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடன் தொகையைச் செலுத்த முடியாமல் மேலதிக கால அவகாசம் கேட்கும் ஒரு நிலைமைக்கு இந்த அரசு நாட்டைக் கொண்டு வந்துள்ளது. வரிச் சலுகைகள் வழங்கப்பட்டிருந்தாலும் மக்கள் அதன் பலன்களைப் பெற்றுக்கொள்ளவில்லை.

ஜனாதிபதி தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்த நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டதே தவிர சலுகைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 3ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண உலர் உணவுப் பொதிகள் வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்த அரசு இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

அரிசி மற்றும் மரக்கறிகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மக்கள் தங்களின் வாழ்க்கைச் செலவீனத்தை ஏற்று நடத்த முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

மார்ச் முதலாம் திகதி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக இந்த அரசு அறிவித்துள்ளபோதும் அதற்கான எவ்வித நடவடிக்கையும் தற்போது மேற்கொண்டு வருவதாகத் தெரியவில்லை.

பட்டதாரிகளுக்கான அரச தொழிலுக்கு வயது வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் பட்டதாரியானவருக்குத் தற்போது வயது 45 ஐத் தாண்டியிருக்கும். இவர்கள் அரச தொழிலை நம்புவது சாத்தியமானதல்ல. பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகள் வெளியேறும்போதே வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்" என்றார். (கு-22)




The Bachelor of Education (Teaching of English as Second Language -TESL) is in high demand for employers in a variety of industries. It provides students with thorough knowledge of Education by equipping the students with a detailed understanding and skill that is applicable to the workplace and beneficial to the graduate.

**Why Choose Us?**
- Flexible time table
- Smart class room, Library, IT lab facilities
- Well experienced and qualified panel of lecturers

**Professional Teaching Practice will be provided**

Sri Lanka UGC Recognized

**Duration Approximately 12 to 18 Months**

TVEC Approved Centre

BLC CAMPUS

For more information:
0777 17 4443 Sapthika
0777 07 4449 Vithya

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

**The Royal College of Jaffna**

சுலபமாக இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப்பயில

By:- விஸ்வப்பிரம்ம ஸ்ரீ ந.விக்னேஸ்வரன் ஆச்சாரியார்

வகுப்புக்கள் சங்கானை, யாழ்ப்பாணம்.

**077 675 1649**

**வேலைக்கு ஆள் தேவை**

திருநெல்வேலி சந்தியில் உள்ள புடைவை நிலையத்திற்கு வேலைக்கு பெண்கள் தேவை.

தொடர்பு:- N.Collection
076 306 3306

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உடுத்துறை, மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்துக்கு அருகில் 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

**075 593 5814**

**மணமகள் தேவை**

யாழ் இந்து 1977 உத்திரட்டாதி கி.பா 17 1/4, உயரம் 5'2" செரந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

குறிப்பு: தரகர் தேவையில்லை.

நேரடித் தொடர்புக்கு: **076 449 6275**

**நாகபூசணி திருமணசேவை**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 071 999 9306, 077 138 7596

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள Phone Shop இற்கு வேலைக்கு ஆண்கள் தேவை.

தொடர்பு:- N.Mobile
077 440 8040

## விற்பனைக்குண்டு

Handanar Box (ஹேண்டனர் பெட்டிகள்) 20" அடி மற்றும் 40" அடி விற்பனைக்குண்டு.

பழைய பாவனைக்கு உதவாத வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(AVA/666)(11,17)

**077 959 7231**

## தங்க நகை மீட்பு

அடைவு வைத்து, மீட்க முடியாமல் அறுதியாகவுள்ள தங்கநகைகளை மீட்டு நல்ல விலைக்கு விற்று மேலதிக பணத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள நாங்கள் உதவுகிறோம். உங்களது பெயர், தொடர் இலக்கத்தை 0778661605 தொலைபேசிக்கு அனுப்பிவையுங்கள்.

(cs.31056)(13,17)


## ஒன்பதாம் ஆண்டு நினைவினில்...



திருமதி
**மனோன்மணி அம்பலவாணர்**

மண்ணில்
22.10.1938

விண்ணில்
28.02.2011


ஒன்பது ஆண்டுகள் சென்று விட்டன
எண்ணிப் பார்க்கின்றோம், உங்கள்
எண்ணில் அடங்கா நினைவுகளை, நாம்
என்றென்றும் உங்கள் சிந்தனையுடனும்
உங்கள் ஆசீர்வாதத்துடனும் உங்கள்
பெயர் சொல்ல வையகத்தில் வாழ்வோம்
உங்கள் வாழ்த்தொலியுடன்...

651/13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சுகுமாரன் நிதர்சினி
குடும்பத்தினர்.
077 773 0597

(CS.23863)(13,17)

## மரண அறிவித்தல்



தோற்றம்
01 . 01 . 1929

மறைவு
17 . 02 . 2020

## செல்லப்பா நடராசா

**(இளைப்பாறிய பொலிஸ்மா உத்தியோகத்தர் 5890)**

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும், கனடா **Toronto**வை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நடராசா கடந்த **(17.02.2020)** திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), ஸ்ரீறங்கராசா (கனடா), ஸ்ரீசந்திரகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வீகன் (கனடா), ஜெயராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான துரைராசா, ரத்தினம், குணரட்ணம், தியாகராசா, மகேஸ்வரி, புஸ்பராணி மற்றும் மங்கையற்கரசி (கனடா), இராசமணி, நமசிவாயம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நாகராசா, மகேந்திராசா மற்றும் சர்வானந்தராசா (கனடா), லோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் கெலின், ஷாபியா, கேஷியன் அகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(20.02.2020)** வியாழக்கிழமை கனடாவில் **Chaple Ridge Funeral Home & Cremation Centre8911 Woodbine Ave Markham On L3R5G1 Canada 12.00Pm** தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுவிளான்,
இளவாலை.

தகவல்:
அ.சத்தியராசா

தொடர்பு:- மகன் 1416 9188 914

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
03 . 03 . 1958

இறப்பு
20 . 02 . 2009

### அமரர் அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாணம்)

திதி:- அபரபக்க ஏகாதசி
(19.02.2020)

அப்பா!
அன்று,
கோயில் திருவிழாவில் தோளில் சுமந்து தெய்வத்தைக் காட்டினீர்கள்.....
இன்று,
உணர்கிறோம் தோளில் சுமந்ததே தெய்வம் தானென்று......
என்றும் எங்களோடு இருங்கள்!

"திருவதிகை", அளவெட்டி. (IN/31328)(11,17)

பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### நாகம்மா கதிரன்



பிறப்பு
01.07.1939

இறப்பு
18.02.2020

கிளானை தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் துர்க்காபுரம் தெல்லிப்பளையை வதிவிடமாகவும் கொண்ட நாகம்மா கதிரன் நேற்று (18.02.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2020) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெல்லிப்பளை

தகவல்: மகன் (அருந்தவராசா)
077 453 8563

### திருமதி மேரி குணராதா (ரதி) தவரட்ணம்

(ஓய்வு பெற்ற அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)



பிறப்பு:
31.05.1937
மகிமைக்குள் பிரவேசித்தது:
17.02.2020

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி மேரி குணராதா தவரட்ணம் (ரதி) 17.02.2020 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி S.V. குணநாயகம் - ஞானமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற J.G. தவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், Rev. சிஸ்டர் யூனிஸ் (இலங்கை பெந்தெகொஸ்தே சபை), சோபனா, லெஸ்லி (லண்டன்), காலஞ்சென்ற வெஸ்லி ஆகியோரின் அன்புத் தாயும், சிவலோகநாயகியின் (லண்டன்), அன்பு மாமியும், கேஷன், கேசியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான குணமணி, இராஜரட்ணம், குணசீலன் மற்றும் Dr.குணபாலன் (கனடா), Dr.குணசெல்வம், Dr. குளோரியானா, குணரூபினி, செல்வநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.02.2020) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக சுப்பர் மடத்திலுள்ள சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் ஒழுங்கை,
ஐயனார் கலட்டி, பருத்தித்துறை.

(cs31341)(13,17)

தகவல்:
பிள்ளைகள்.

## கிடுகு வழங்குநர்களுக்கான கூறுவிலை கோரல்

ஆனையிறவு உப்பளத்துக்கு 01.04.2020 முதல் 31.03.2021 வரையான காலப்பகுதிக்கு சுமார் 100,000 கிடுகுகள் (07 அடி நீளம் 10 அங்குல அகலம்) வழங்குவதற்கான மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. மாதமொன்றுக்கு சராசரியாக 15000 கிடுகுகள் விநியோகிக்கக் கூடியவர்கள் 04.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக தகவல்களையும் 021 320 4556, 071 861 3361 என்ற தொலைபேசி ஊடாகவும் mantaiepass@gmail.com, managerepass@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**முகாமையாளர்,**
**ஆனையிறவு உப்பளம்,**
**A9 வீதி, ஆனையிறவு.**

(AKN/935)(11,17)




வவுனியாகருங்காலிக்குளம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி நேற்றுச்செவ்வாய்க்கிழமை அதிபர் திருமதி புனிதவதிகிருபராசா தலைமையில் நடைபெற்றது. (க-110)

### வனவளத் துறையினர் அபகரித்த

# காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழு அமைப்பு

வவுனியா, பெப். 19

வனவளமற்றும்வனஉயிரிகள் திணைக்களங்கள் மக்களின் காணிகளைப்பிடித்துவைத்திருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க குழு ஒன்றை அமைக்கப்படும் . குழுவும் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லையாயின், தேசிய குழு ஒன்றுக்குப் பாரப்படுத்தி தீர்க்கநடவடிக்கைஎடுக்கப்படும் என்றுவன உயிரிகள்திணைக்கள இராஜாங்க அமைச்சர் விமலவீரதிசாநாயக்கதெரிவித்தார். பொதுமக்களின் காணிகள் மற்றும் வனவிலங்குகளால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும்விதமானதாகநேற்றுக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர்மேற்கண்டவாறுகூறியுள்ளார்.

இதன்போது, வனவளத் திணைக்களத்தால் காணிகள் விடுவிக்கப்படாமையால் பல்வேறு காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்களைப் பொதுமக்களுக்குவழங்கமுடியாமல்இருப்பதாக பிரதேச செயலர்கள் அமைச்சரிடம்சுட்டிக்காட்டினார். குறிப்பாக வவுனியா வடக்கு காஞ்சூரமோட்டை பகுதியில் வசிக்கும்பொதுமக்கள்இந்தியா உட்படபல்வேறுபகுதிகளுக்குப் புலம்பெயர்ந்துமீளக்குடியமர்ந்த நிலையில்அவர்களின்400ஏக்கர் காணிகள் வனவளத் திணைக்களத்தால் எல்லைப் படுத்தப்பட்டுள்ளன. இதனால் நீண்டகாலத்தின்பின்னர்மீளத் திரும்பிய மக்கள் தமது காணிகளைஅடையாளப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்என்றுபொதுமக்களின்முறைப்பாடுகளைஅதிகாரிகள்அமைச்சரிடம்சுட்டிக்காட்டினர்.

"போரால்இடம்பெயர்ந்துசென்ற நிலையில், எமது காணிகளில் காடுகள்வளர்ந்துள்ளன. அந்தப் பகுதிகளைவனவளத்திணைக்களத்தினர் தமது ஆளுகைப் பகுதியாகக் கூறிவருகின்றனர். எனினும், அந்தப் பகுதிகளுள் இன்னும் பொதுமக்களின் பழைய கட்டடங்கள், கிணறுகளின் எச்சங்கள் இருக்கின்றன. அவை தொடர்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை" என்றும் பொதுமக்கள்குற்றம்சுமத்தியிருந்தனர். இவைதொடர்பாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அதன்போது அமைச்சர், "பலஆயிரம்வருடங்களாகசூழலோடு நாம் வாழ்ந்திருக்கிறோம். மனிதர்கள், வனம், வன விலங்குகள் இவை மூன்றும் இணைந்ததாகவே எமது வாழ்க்கை அமைந்திருந்தது. இவை தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள்.

இந்தப்பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு வன்னி மாவட்டங்களின் மாவட்டச்செயலர்களைத்தலைமையாகக் கொண்டு, பிரதேச செயலர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கானஏற்பாடுகளைமுன்னெடுக்கும். இந்த குழுவால் தீர்க்கப்படமுடியாத பிரச்சினைகளை தேசிய குழு ஒன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டு அதன்மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கை இடம்பெறும்.

இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும்பிரதமருடன்கலந்துரையாடவுள்ளேன். என்று அமைச்சர் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களானகாதர் மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தர்மபால செனவிரட்ன, வன்னி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், திணைக்களத்தலைவர்கள் கலந்துகொண்டனர். (த-110)

## வெயில் காலத்தில் அதிகநீரை குடியுங்கள்

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான கால நிலையின் தாக்கத்திலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அதிகமாக தண்ணீரை அருந்துவதோடுமதியவேளைகளில் உடற்பயிற்சிவிளையாட்டு, பயணங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் சுகாதாரத்துறையினர் அறிவித்துள்ளனர்.

நாட்டில் வெப்பமான காலநிலை தொடர்பில் சுகாதாரத் துறையினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"வெப்பத்தின்போதுஉடற்பாதுகாப்புக்குரிய ஆடைகளை அணிவதுடன் தொப்பிகளையும் பயன்படுத்த வேண்டும். உடலில்வெப்பம்அதிகரிக்கும் போது பக்கவாதம், தலைவலி, உடற்சோர்வு, மயக்கம், தசைப்பிடிப்பு, சுவாசச்சிரமம்போன்றஅறிகுறிகள் தோன்றும் அதன்போது தகுந்ததற்காப்புநடவடிக்கைகளையும்சிகிச்சைகளையும் மேற்கொள்ள வேண்டும் "எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)


## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார் வலைப்பாட்டுக் கடலில் சங்கமமான

**திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி)** தோற்றம்:-23.06.1974
**திருச்செல்வம் கம்சினி** தோற்றம்:-05.06.1996
**சிவலிங்கம் திருச்செல்வம்** தோற்றம்:-08.02.1972

மறைவு:-19.02.1997

ஆண்டுகள் இருபத்திமூன்று வேகமுடன் கரைந்துபோய் விட்ட போதிலும் – இன்றும் எம் மனங்களில் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கிறது
மீண்டும் உங்கள் வருகைக்காய் காத்திருந்து உங்கள் முகம் பார்க்க ஏங்குகின்றது எமது உள்ளம்
அனைவரின் நெஞ்சங்களையும் கொள்ளை கொள்ளும் கள்ளமில்லாத உங்கள் அன்பு –இன்று நினைத்தாலும் எமது விழியோரம் நீரைச் சிதறச் செய்கிறது....

சி.தேவகுஞ்சரம்,
கதிரிப்பாய், அச்சுவேலி.

என்றும் நினைவுடன்
அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்



## 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 10 . 1937



மறைவு 13 . 02 . 1988

**அமரர் தி.சி. சண்முகலிங்கம்**
(இணுவில் கிழக்கு)
**திதி: அபரபக்க ஏகாதசி (19.02.2020)**

சைவமும் தமிழும் திகழும் இணுவையிலே!
செய்யரிய சேவையால் உயர்ந்து நன்றே!
வையகம் போற்ற வாழ்ந்த வேளை
தந்தையே உம்பிரிவு சடுதியில் நிகழ்ந்ததோ!

வண்ணமிகு எம் வாழ்வில் துன்பநிலை
எண்ணிலாது சூழ கல்வியால் யாம் தேறினாலும்
அண்ணலே! தாங்கள் இல்லையே தவிக்கின்றோம்
கண்கள் கண்ணீரை இன்னும் மறக்க வில்லையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனை பிரார்த்திக்கின்றோம்

'சுகந்தம்'
இணுவில் கிழக்கு,
இணுவில்.

அன்பான மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேர்த்திகள், சுற்றத்தார்கள்.

(cs.12588)(13,17)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.01.2020 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்
அமரர்
**கந்தையா சிவபாதம்**
அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (19.02.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம்
077 606 9752, 077 482 1893

குடும்பத்தினர்



# விராட்டின் விக்கெட்டே எனது இலக்கு

ரென்ட் போல்ட் தெரிவிப்பு

காயம் குணமாகி அணிக்கு திரும்பியுள்ள டிரென்ட் போல்ட், விராட் கோக்லியின் விக்கெட்டை வீழ்த்துவதற்காக காத்திருக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் டிரென்ட் போல்ட் பந்தை ஸ்விங் செய்வதில் வல்லவர். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்போர்னில் நடைபெற்ற பாக்சிங் டே டெஸ்டில் விளையாடிய டிரென்ட் போல்டுக்கு கையில் முறிவு ஏற்பட்டது.

இதனால் இந்தியாவுக்கு எதிரான ரி-20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான நியூசிலாந்து அணியில் இடம் பெறவில்லை. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நாளைமறுதினம் வெலிங்டனில் ஆரம்பமாகின்றது. இந்த டெஸ்ட் போட்டியில் விளையாட டிரென்ட் போல்ட் உடற்தகுதி பெற்றுள்ளார்.

இந்த நிலையில் விராட் கோக்லி விக்கெட்டை வீழ்த்துவதற்காக காத்திருக்க முடியாது என்று முதல் டெஸ்டில் விளையாட இருக்கும் டிரென்ட் போல்ட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

தனிப்பட்ட முறையில் நான் போட்டியில் விளையாடும்போது விராட் கோக்லி போன்ற வீரர்களை ஆட்டமிழக்க செய்ய வேண்டும் என விரும்புவேன். எனக்குள்ளே இப்படி ஒரு போட்டியை உருவாக்கிக் கொள்வேன். ஆகவே, விராட் கோக்லியை ஆட்டமிழப்பு செய்வதற்காக காத்திருக்க முடியாது- என்றார்.





# மார்ச் 29 ஐபிஎல் திருவிழா ஆரம்பம்

ஐபிஎல் 2020 தொடருக்கான போட்டி அட்டவணை கடந்த சனிக்கிழமை கசிந்த நிலையில், இன்று பிசிசிஐ அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. ஐபிஎல் 2020 சீசன் ரி20 கிரிக்கெட் போட்டி மார்ச் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்த நிலையில் வான்கடே மைதானத்தில் இடம் பெறும் முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த ஐபிஎல் தொடரில் வார இறுதி நாளில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் 2 போட்டிகள் நடைபெறும். லீக் போட்டிகள் 44 நாட்களுக்கு பதிலாக 50 நாட்கள் நீட்டிக்கப்பட்டு உள்ளன. போட்டிகள் இரவு 8 மணிக்கு ஆரம்பமாகும். அதே நேரத்தில் சில போட்டிகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் என போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

# ஆசிய மல்யுத்த போட்டிக்கு சீனாவுக்கு அனுமதி மறுப்பு

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 40 பேர் கொண்ட சீன அணிக்கு ஆசிய மல்யுத்த போட்டியில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டது.

ஆசிய மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் நேற்று முதல் 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள கடும் முயற்சிக்கு பிறகு பாகிஸ்தான் அணிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 40 பேர் கொண்ட சீன அணிக்கு இந்த போட்டியில் பங்கேற்க மத்திய அரசு மறுத்துள்ளது.

இது குறித்து இந்திய மல்யுத்த சம்மேளன உதவி செயலர் வினோத் தோமர் தெரிவிக்கையில், 'கொரோனா வைரஸ் தாக்கம் உலகம் முழுவதும் பரவி வருகிறது. எனவே தற்போது வீரர்களின் உடல் நலம் மிகவும் முக்கிய பிரச்சினையாகும். சீன அணியினருக்கு மத்திய அரசு விசா வழங்க மறுத்ததற்கான காரணத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது'- என்றார்.



போட்டியின் போது கோர விபத்து

# ஆபத்தான நிலையில் கார்ப் பந்த வீரர் நியூமன்

நஸ்கார் என்ற தேசிய சரக்குத் தானுந்து ஓட்டப் போட்டி சங்கத்தின் கார்ப்பந்தைய வீரரான அமெரிக்காவின் ரியான் நியூமன் என்பவர் விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


புளோரிடாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 'டே ரோனா- 500' என்ற கார்ப்பந்தையத்தில் கலந்து கொண்டபோது அவரது கார் எதிர்பாராத விதமாக கோர விபத்துக்குள்ளாகி தீப் பற்றி எரிந்தது. தொடர்ந்து மீட்பு படையினரின் உதவியுடன் காரிலிருந்து மீட்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதன் பின்னர் அவர் உடனடியாக புளோரிடாவின் ஹாலிஃபேக்ஸில் உள்ள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

ரியான் நியூமனின் நிலை பற்றி தெரிவித்த நஸ்கார் அதிகாரிகள், அவரது நிலை ஆபத்தான நிலையில் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் ரியான் நியூமன் குணமடைவதற்கு பிரார்த்தனை மேற்கொள்வதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

42 வயதான ரியான் நியூமன் 2008 டேடோனா 500 மற்றும் 2013 ப்ரிக்யார்ட் 400 கார்ப் பந்தைய கிண்ணம் உட்பட 18 கிண்ணங்களை தனதாக்கியுள்ளதுடன் மேலும் பல கிண்ணங்களையும் தனதாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.19
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 20வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை கொழும்பு குதிரை சவாரித் திடலில் சர்வதேச மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் கொழும்பு சென். பீற்றரஸ் கல்லூரி அணியை எதிர்த்து மருதானை சென்.ஜோசப் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 6மணிக்கு இடம் பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்.பெப்.19
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏபிசி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆனைக் கோட்டை கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம், பெப்.19
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின் ஒளியில் நடத்தும் மெகா நைட் பிறீமியர் லீக் மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை கில்லாடி 100 விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நோநேம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கல்வியங்காடு சுப்பர் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



### மன்னார் பிறீமியர் லீக்

# பீனிக்ஸை வீழ்த்தியது மடு கால்பந்தாட்ட அணி

மன்னார் கால்பந்தாட்ட போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டத்தில் மடு கால்பந்தாட்டக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 2 ஆம் நாள் போட்டிகள் நேற்று முந்தினம் இரவு 7.45 மணியளவில் மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் மடு கால்பந்தாட்ட கழக அணியை எதிர்த்து மன்னார் பீனிக்ஸ் கால்பந்தாட்ட கழக அணி மோதியது. போட்டி ஆரம்பமாகி 33ஆவது நிமிடத்தில் மடு கால்பந்தாட்ட கழக வீரரான ரி.கிளின்ரன் முதலாவது கோலைப் பதிவு செய்த மடு கால்பந்தாட்ட கழக அணி முதல் பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு கோல்களைப் போடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இருந்தும் ஆட்டத்தின் 86ஆவது நிமிடத்தில் மடு கால்பந்தாட்ட கழக அணிக்கு மேலுமொரு கோல் கிடைக்கப் பெற இறுதியில் மடு கால்பந்தாட்ட கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (56)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.19
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் 21 வயதுப் பிரிவினருக்கான தொடரில் சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி, சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக் அணி ஆகியவை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

கடந்த சனிக்கிழமை சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் முதலாவது ஆட்டத்தில் அரையிறுதியாட்டத்தில் பல்லசுட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் ஞானவைரவர் அணி 8:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி க்கு முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் உதயசூரியன் அணி 8:3 என்ற என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. (23)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.19
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற லீக் ஆட்டங்களில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி 8:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# கிண்ணம் வென்றது துறையூர் ஐயனார்



யாழ்ப்பாணம், பெப்.19
விடிவெள்ளி அமைப்பினின் அனுசரணையுடன் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் நடத்திய விடிவெள்ளிக் கிண்ணத்துக்கான 2020 ஆம் ஆண்டுக்கான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக ஏ அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் மின்ஒளியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக ஏ அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக ஏ அணி 1.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வேலணை மத்திய கல்லூரி முதல்வர் சி.கிருபாகரன், சிறப்பு விருந்தினர்களாக தீவக கால்பந்தாட்டச் சங்கத்தலைவர் ஜெயால்ட் அன்ரனி அல்லையூர் அறப்பணி குடும்ப ஸ்தாபகர் செ. ஆனந்தக்கரசு (சிவா), கௌரவ விருந்தினர்களாக விடிவெள்ளி அமைப்பின்தலைவர்இ.ஸ்ரீதரன்ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.(23)

# நெல் கொள்வனவுக்காக கூட்டுறவுக்கு ரூ.16 மில்.

## விலையைத் தக்கவைக்க என்கிறார் பிரதம செயலர்



முல்லைத்தீவு, பெப்.19

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விவசாயத்தை நவீனமயப்படுத்துகின்ற திட்டம் மற்றும் காலநிலை சீரமைப்புக்கான விவசாய நீர்ப்பாசனத் திட்டம் என விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தியுடன் தொடர்புடைய, உலகவங்கியின் நிதி உதவியுடன் கூடிய இருவேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

அத்துடன் நெல்லின் சந்தை விலையைத் தக்கவைப்பதற்கும், விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தலில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைத் தீர்ப்பதற்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லைப் பெற்றுக் கொள்வதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 16 மில்லியன் ரூபா நிதி வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின்பேரில் வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார். முல்லைத்தீவு முத்து ஐயன் கட்டு பிரிவுக்குரிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் பணிமனைத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த மூன்று ஆண்டுகளாக மாகாணசபை, மாகாணத்திணைக்களங்களினதும் பிராந்தியத்திணைக்களங்களினதும் நிரந்தரமான அலுவலகங்களை அமைப்பதற்கு முன்னுரிமை கொடுத்துவந்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் 2018 ஆம்ஆண்டு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினுடைய தலைமை அலுவலகத்தை மாங்குளத்தில் அமைத்தோம், அதே ஆண்டில் மன்னார் மாவட்டத்தினுடைய நீர்ப்பாசன அலுவலகம் அமைக்கப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம் விவசாயிகளை அண்மித்து இருப்பதுடன், திறமையாக முழு வசதிகளுடனும் இருக்கின்றபோதுதான் விவசாயிகளுக்கான முழுமையான சேவைகளை ஆற்ற முடியும். முல்லைத்தீவு மாவட்டம், முத்துஐயன்கட்டு, வவுனிக்குளம் என, இரண்டு நீர்ப்பாசனப் பிரிவுகளை உடையதாகக் காணப்படுகின்றது. புதியஆளுநர் இந்த விவசாயமற்றும்நீர்ப்பாசனத்திட்டங்களிலே அதி கூடிய கவனம் எடுத்துவருகின்றார்.

கடந்த பத்துநாள்களுக்கு முன்பு, விவசாய அமைச்சரை நாம் நாடாளுமன்றத்தில் சந்தித்து இந்த வடக்கு மாகாணத்தினுடைய நீர்ப்பாசனக் குடிதண்ணீர்த் திட்டங்கள் எவ்வாறு அமையவேண்டுமென உரையாடினோம். இப்போது முல்லைத்தீவுமாவட்டத்துக்கு விவசாயத்தை நவீனமயப்படுத்துகின்ற திட்டம், மற்றும் காலநிலை சீரமைப்புக்கானவிவசாயநீர்ப்பாசனத் திட்டம் என இரண்டு உலகவங்கியுடன் கூடிய திட்டங்கள், நடைமுறைக்குவந்திருக்கின்றன. விவசாயத்தை நவீனமயப்படுத்துகின்றதிட்டத்தைப்பொறுத்தவரையில், இத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, முத்துஐயன் கட்டும் உள்வாங்கப்பட்டு குளத்தின் கீழே வருகின்ற பகுதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்கள் வருகின்றபோது, பொருளாதார முதுகெலும்பாக இருக்கின்ற விவசாயத்துறை, அதிலே தங்கியிருக்கின்ற விவசாயிகளினுடைய பொருளாதாரம் மேலும் சிறப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

பல குறைபாடுகளும் இருக்கின்றன. தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆளுநர் விவசாயத்தினுடைய உற்பத்தி விலைகளைத் தக்கவைப்பதற்காக, குறிப்பாக நெல்லினுடைய சந்தை விலையைத் தக்கவைப்பதற்காக விசேட அனுமதியை வழங்கியிருக்கின்றார்.

அதற்கேற்ப நாங்கள் இயலுமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 16மில்லியன் ரூபாவைக் கொடுத்திருக்கின்றோம். அவர்கள் ஆறு மாதத்திற்குள்ளே நெல் வியாபாரத்தை மேற்கொண்டு அந்தப் பணத்தை எங்களுக்குத் திருப்பித் தரவேண்டும். அவர்களுக்கு இதில் நிறையவே இலாபம் இருக்கின்றது என்றார். (ஐ-246)

## வாழ்வாதார உதவி




வவுனியா, பெப்.19

மடு பண்டிவிரிச்சான் கிராமத்தில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. நல்லின கோழிகள் மற்றும் கோழிக் கூடு அமைக்கப்பட்டு இதர உதவிகளும் ஜனனம் நம்பிக்கை மையத்தால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ஐ-110)

## மாற்றுத் திறனாளிகள் 74 பேருக்கு உதவிகள்



வவுனியா, பெப்.19

தமிழீழ விடுதலைக் கழகத்தின் செயலதிபர் உமாமகேஸ்வரனின் 72 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, உமாமகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பால், மாற்றுத்திறனாளி மாணவர்கள் 74 பேருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

செட்டிகுளம் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை உதவிகள் வழங்கப்பட்டன. உமாமகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பின் தலைவர் ஜி.ரி.லிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர், செட்டிக்குளம் பிரதேச மாற்றுதிறனாளி சங்கத் தலைவர், வரோட் அமைப்பின் பிரதிநிதி, பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-110)

## பச்சை மிளகாயின் விலையில் வீழ்ச்சி

குருநகர், பெப்.19

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் பச்சை மிளகாயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதுவரை ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூபா 280 ஆக விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒரு கிலோ ரூபா 160 ஆக வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டது. (ஐ-51)

## சான்றிதழ் வழங்கலும் சின்னம் சூட்டும் நிகழ்வும்



மன்னார், பெப்.19

நல்லிணக்க செயற்பாட்டில் ஈடுபட்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் நடைபெற்றன.

மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாகவும், தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் நோக்குடன் 'ஒன்று கூடுவோம் இலங்கை' அமைப்பினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட நல்லிணக்க செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் தொண்டர் அடிப்படையில் ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பினூடாக நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் இளைஞர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் நடைபெற்றது. (ஐ-56)



யாழ்ப்பாணம் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (க)

## குருதிக்கொடை

கொழும்பு, பெப். 19

மஹரகமஅபேக்சாமருத்துவமனை நோயாளிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை வழங்கும்நிகழ்வுநேற்று நடைபெற்றது.

கல்வி அமைச்சின் சிறிலங்கா பொதுஜன கல்வி ஊழியர் சங்கத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதன்மை விருந்தினராக பிரதமரின் பாதிரியார் சிரந்தி ராஜபக்ஷ கலந்துகொண்டார். (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எல்லாம் வாக்குப் பிச்சைக்காகவே....!

பெரு நகரங்களில் அலைந்து திரியும் பிச்சைக்காரர்களுக்கு தங்கள் உடலில் ஏதாவது காயம் ஏற்பட்டுவிட்டால், மகிழ்ச்சியில் துள்ளிக்குதிப்பார்கள். ஏனெனில் அந்தக் காயத்தை போவோர் வருவோரிடம் காட்டி, அவர்களின் அனுதாபத்தைப் பெற்று, சில்லறைகளைக் கொஞ்சம் கூடுதலாகப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட பிச்சைக்காரப் புண்ணாக, 'கோத்தாஅண்ட் கொம்பனிக்கு' வாய்த்திருக்கிறது, இலங்கை இராணுவத்தளபதி சவேந்திரா சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத்தடை.

கோத்தாபய ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது இருந்த, பொதுஜன பெரமுன ஆதரவு அலை இப்போது அடங்கிக் கொண்டு வருகின்றது. தொடர்ச்சியாக நிகழும் அரசியல் பழிவாங்கல்கள், மெதுவாக ஏறிக்கொண்டுபோகும் அத்தியாவசியப் பொருட்களின் விலை, ஒருதலைப்பட்சமான நியமனங்கள், இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிவில் நிர்வாகப் பதவிகள், நீதித்துறையை தம் சட்டைப் பைக்குள் வைத்திருக்கும் முயற்சிகள், கூட்டணிக் குழப்பம், கோத்தா வந்தால் இலங்கையில் பாலாறும் தேனாறும் ஓடும் என்ற கனவு கானலாகிப் போனமை போன்ற விடயங்களெல்லாம் ஒன்று சேர்ந்து, மொட்டு மீதான ஈர்ப்பை நீர்த்துப் போகச் செய்துவருகின்றன. அதனால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைக்காமல், கொஞ்சம் விட்டுப் பிடித்து சரியான சூழல் வரும்வரை காத்திருந்து கலைக்கவும் அரசு ஆலோசித்து வருகின்றது. எனினும், மொட்டுக் கட்சிக்காரர்களுக்கு இப்போதுள்ள ஒரேயொரு ஆறுதலான விடயம், அவர்களுக்கு பிரதான சவாலாக இருக்கப்போகும் ஐ.தே.கவும் உட்கட்சிப் பூசலால் அல்லோலகல்லோலப்படுவதுதான். அதனால் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி, மொட்டை மலர வைக்கமுடியும் என்று 'கோத்தா அண்ட் கொம்பனி 'நம்புகிறது.

இருப்பினும் சாதாரண பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தால், தாம் நினைத்த மாற்றங்களை அரசியலமைப்பில் கொண்டுவருவதென்றால் 'கோத்தா அண்ட் கொம்பனி 'க்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். இல்லாவிடின், முக்கியமான தீர்மானங்களை அரசு நாடாளுமன்றில் முன்வைக்கும் போது, எதிர்க்கட்சி முதல் உதிரிக்கட்சிகள் வரை எல்லோரின் காலையும் பிடித்துக் கெஞ்சவேண்டியிருக்கும் அல்லது அவர்களின் சொல்படி சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவேண்டியிருக்கும். அப்படி விட்டுக் கொடுத்தல், ஏனைய கட்சிகளிடம் கெஞ்சுதல் என்பனவெல்லாம் கோத்தாவுக்கு பிடிக்காத விடயங்கள். எனவே எப்படி நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எடுக்கலாம் என்று மொட்டுக்கட்சியினர் துக்கத்தில் மூழ்கியிருந்த போதுதான், வராது வந்த மாமணியாக சவேந்திரா சில்வா மீதான அமெரிக்கப்பயணத் தடை வந்து சேர்ந்திருக்கிறது. வெறும்வாயோடு காத்திருந்தவர்களுக்கு வெல்லத்தோடு அவல் கிடைத்துவிட்டது. சும்மாவிடுவார்களா?

"இதை வைத்தே இம்முறை வாக்குவங்கியை நிரப்பிவிட வேண்டியதுதான் " என்ற முடிவோடு மொட்டுக் கட்சியினர் ஆளாளுக்கு அறிக்கை மேல் அறிக்கையாக விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அஸ்கிரிய, மல்வத்து பீட மகாநாயக்கர்களும் காவியைத் தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு, அமெரிக்காவுக்கு எதிராக நாக்கைத் துருத்தி, எச்சரிக்கிறார்கள். அமைச்சர்கள் உருவேறியவர்கள் போல, கலையாடுகிறார்கள். அமெரிக்கா கூட இந்தப் பயணத்தடை விதிப்பை மறந்து போனாலும் கூட இவர்கள் விடமாட்டார்கள் போலும். இப்போதைக்கு இந்தப் பிரச்சினையை ஆறவிடக்கூடாது என்பதில் அரசதரப்பு தெளிவாக இருக்கின்றது. ஆனால் அவர்கள் விடுகின்ற அறிக்கைகளும், உச்சரிக்கின்ற சொற்களும் 'குபீர்' என்று சிரிக்கவைக்குமளவுக்கு இருக்கின்றன.

"இலங்கையின் இராணுவத்தளபதிக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத்தடை எமது இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட சவால். இந்த அமெரிக்காவை நாம் சும்மா விடக்கூடாது. எமது எதிர்ப்பைக் காட்ட, தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒருவர் கூட, அமெரிக்கா விசாவுக்கு விண்ணப்பிக்கக் கூடாது" என்று ,வடிவேல்தனமான கருத்தைச் சொல்லியிருக்கிறார் மரிக்கார் எம்.பி . இலங்கையர்கள் எவரும் விசாவுக்கு விண்ணப்பிக்கா விட்டால், அமெரிக்கப் பொருளாதாரம் சரிந்து விழுந்து, வறுமை மிஞ்சி , இலங்கையின் காலடியில் அமெரிக்கா கெஞ்சிக் கூத்தாடும் என்று மரிக்கார் எம்.பி , கோத்தா ஆதரவு உறுப்பினர்கள் மனம்போனபடியெல்லாம் கனவு காண்கிறார்கள்.

இருப்பினும் , என்னதான் தாங்கள் அசிங்கப்பட்டாலும் பரவாயில்லை,இந்தப் பயணத்தடை விவகாரத்தை , பெருந்தேசிய வாதிகளின் மூளைக்குள் திணித்து, அவர்களுக்குள் அடங்கத் தொடங்கியிருக்கும் பெருந்தேசிய நெருப்பை பற்றியெரிய வைப்பதற்காகவே இந்த உசுப்பேற்றல்கள் தொடங்கியுள்ளன. வாக்குப் பிச்சைக்காக பயணத்தடைப் புண்ணைச் சொறிந்து காட்டும் அளவுக்கு , அதிகார ருசி அவ்வளவு மலினமாகி விட்டதே.

# ஐ.நாவுடன் மோத இலங்கை தயார்!

## வெளிவிவகார அமைச்சர் தலைமையில் அரச குழு ஜெனிவாவுக்கு விரைகிறது

கொழும்பு, பெப். 19



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணைஅனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து விலகுவதை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு, வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தலைமையிலான அரச குழு ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகி, அடுத்த மாதம் 24 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. இலங்கை விவகாரமும் இந்தக் கூட்டத் தொடரில் எடுக்கப்படவுள்ளது. இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை இலங்கை அரசுக்கு கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை அரசு நேற்றுமுன்தினம் ஆராய்ந்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு ஏற்கனவே ஐ.நா. சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தாலும், உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு, வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தலைமையிலான குழுவினர் ஜெனிவாவுக்குப் பயணமாகவுள்ளனர்.

ரணில் அரசு மூன்று தடவைகள் ஐ.நா. தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தாலும், அது தொடர்பில் அமைச்சரவைக்கோ, நாடாளுமன்றத்துக்கோ அறிவிக்கவில்லை. மேலும், அதிகாரப் பகிர்வு, கலப்பு நீதிமன்றப் பொறிமுறை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்கள் இலங்கையின் அரசமைப்பை மீறும் வகையில் இருக்கின்றன எனவும் அதன் காரணமாக இந்தத் தீர்மானத்துக்கு தொடர்ந்தும் இணைஅனுசரணை வழங்க முடியாது என்ற தீர்மானத்துக்கு கோத்தாபய அரசு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,44)



## காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட குழு

கிளிநொச்சி,பெப்.19

வடக்கு மாகாணத்தில் காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு, வடக்கு மாகாண ஆளுநரால், ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசேட குழுவென்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற நீதியரசர் இராசேந்திரன் வசந்தசேனன் தலைவராகவும், மாகாண கணக்காய்வுத் திணைக்கள அதிபதி சுரேஜினி சந்திரசேகர் மற்றும் நடராசா இரத்தினம் ஆகியோர் உறுப்பினர்களாகவும் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் தங்களது பணிகளை நேற்றுச் செவ்வாய்க் கிழமை ஆரம்பித்தனர். இதன் போது, தீர்க்கப்பபாதிருந்த 49 காணிப்பிணக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்று விசாரணைக்குழுவினர் தெரிவித்தனர். (க-214)

## முல்லைத்தீவில் 2019 இல் 35 பேர் உயிர் மாய்ப்பு

முல்லைத்தீவு,பெப்.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் 131பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். அவர்களில் 35 பேர் உயிரிழந்தனர் என்று மாவட்ட சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

80 பெண்களும், 51ஆண்களுமாக 131 பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். அவர்களில்35 பேர்உயிரிழந்துள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்கொலை விகிதம் அதிகரித்து வரும் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்திலும் அதிகரித்த நிலைமை காணப்படுகிறது. அங்கு தற்கொலை விகிதம் 26 ஐத் தாண்டியுள்ளது.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலாளர் பிரிவில், 44 ஆயிரத்து 120 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 623 பேர் வாழ்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-105)

# தேசியப்பட்டியல் அவமானம்

## மைத்திரி சொல்கிறார்

கொழும்பு, பெப். 19

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றத்துக்குச் செல்வது எனக்கு அவமரியாதை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பொலனறுவை பக்கமுன பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்ற போதிலும் மக்களின் வாக்குகளில் நாடாளுமன்றத்துக்கு செல்லவே தீர்மானித்துள்ளேன். தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எனக்கு அழைப்பு விடுத்தனர். ஆனால், முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்துக்குச் செல்வது எனக்கு அவமரியாதை. பொலனறுவை மக்களில் எனக்கு பலத்த நம்பிக்கை உள்ளது" - என்றார். (ம)

# நாளாந்தம் தொடர்கிறது மாடுகளின் உயிரிழப்பு!

## வவுனியா பண்ணையாளர்கள் அச்சம்


**வவுனியா, பெப்.19**

**உயிரிழந்த நிலையில் மாடுகளின் சடலங்கள், வவுனியா நெளுக்குளம் பகுதியில் உள்ள வயல் வெளியில் காணப்படுகின்றன. இவ்வாறு மாடுகள் உயிரிழக்கின்றமையால் பண்ணையாளர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

வவுனியா நெளுக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குழுமாட்டுச்சந்தி பகுதிக்கு அண்மையுள்ள வயல் பகுதியிலேயே இவ்வாறு உயிரிழந்த நிலையில் மாடுகள் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு ஒரு மாடேனும் அந்த வயல் வெளிகளில் உயிரிழக்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறு மாடுகள் உயிரிழக்கின்றமையால், பண்ணையாளர்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வும் ஏற்பட்டுள்ளது. அந்த மாடுகள் அங்கிருந்து அகற்றப்படாதமையால், துர்நாற்றம் வீசுவதுடன் அந்த வீதியூடாகப் பயணிப்பதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினமும் அந்த வயல் வெளியில் மாடு ஒன்று உயிருக்கு போராடிய நிலையில் காணப்பட்டபோது, வவுனியா அரச கால் நடை மருத்துவ அலுவலகத்துக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயம் தெரிவிக்கப்பட்டபோதும் கால்நடை மருத்துவர் விடு முறையில் உள்ளதாகப் பதில் வழங்கப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இந்த நிலையில் கிராம அலுவலரின் உதவியுடன் அந்த மாடு, தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்து விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயம் தொடர்பில் கவனமெடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதோடு வயல்களுக்குச் செல்லும் மாடுகள் உயிரிழப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து பண்ணையாளர்கள் மத்தியில் உள்ள அச்சத்தைப் போக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-18)

# ஞானசாரரை மன்றில் முற்படுத்த உத்தரவு

கொழும்பு, பெப். 19



முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்றத் தீர்ப்பைமீறி செயற்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாக, பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட மூவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த பிக்குவின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்துக்கு எதிராக கலகொட அத்தே ஞானசார தேரர், முல்லைத்தீவு பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிமற்றும்சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஏ.ச்.எம்.நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபயசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நீதிபதிகள் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட மூவரையும் எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவு பிறப்பித்துள்ளனர். (ம)

# நெடுந்தீவுக்கு புதிய தவிசாளர்

யாழ்ப்பாணம் ,பெப்.19

நெடுந்தீவுப் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் ஒருவரை நியமிக்க கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு பிரதேச சபையில் 2018 முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பற்றிக் பிலிப் றொசான் என்பவர் தவிசாளராக இருந்து வந்த நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவுக்கு எதிராக கோத்தாபய ராஜபக்ஷவை ஆதரித்த நிலையில் கட்சியின் அடிப்படை உறுப்பினர் நிலையில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் சபையின் உறுப்பினர் பதவி வறிதாகிய நிலையில் தவிசாளர் பதவியையும் இழந்தார். எனவே வெற்றிடமான நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கு சுயேச்சைக்குழு உறுப்பினரான கணபதிப்பிள்ளை கேதீஸ்வரனை நியமிப்பதற்கு கூட்டமைப்புக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிலிப் பற்றிக் றொசானின் உறுப்பினர் வெற்றிடத்துக்கு கட்சியின் நீக்கிலஸ்பிள்ளை அந்தோனிப்பிள்ளையை புதிய உறுப்பினராகத் தேர்வு செய்யும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ந-105)

### கொரோனாவால் நெருக்கடியில் உள்ள

# ஜப்பானியக் கப்பலில் இலங்கையர் இருவர்!

கொழும்பு, பெப். 19



ஜப்பானின் யோகோகமா துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'டைமண்ட் பிரின்சஸ்' சொகுசு கப்பலில் இலங்கையர்கள் இரண்டு பேர் உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எனினும் அவர்கள் இருவருக்கும் 'கொவிட் 19' என அழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என டோக்கியோவில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அவர்கள் இருவரும் அந்த சொகுசுக் கப்பலின் பணிக்குழாம் உறுப்பினர்கள் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் அந்த கப்பலில் உள்ள இரண்டு இலங்கையர்களும் அவர்களது உறவினர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3,711 பேருடன் கடந்த 3ஆம் திகதி ஹொங்கொங்கிலிருந்து ஜப்பான் நோக்கிச் சென்று கொண்டிருந்த கார்னிவல் ஜப்பான் நிறுவனத்திற்குச் சொந்தமான 'டைமண்ட் பிரின்சஸ்' சொகுசுக் கப்பல், கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக, ஜப்பானின் யோகோஹமா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது.

அந்தக் கப்பலில் இருந்து கடந்த மாதம் ஹொங்கொங்கில் இறங்கிய பயணிக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, அந்தக் கப்பல் கரைக்கு அப்பால் நிறுத்தி தனிமைப்படுத்தப்பட்டது.

அந்தக் கப்பலில் உள்ள பயணிகளுக்கு தினந்தோறும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கப்பலில் இருந்த 455 பேருக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, குறித்த சொகுசு கப்பலில் இருந்த 400 அமெரிக்கர்கள் நேற்றையதினம் இரண்டு விமானங்கள் ஊடாக அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் 40 அமெரிக்கர்களுக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டதையடுத்து, அவர்கள் ஜப்பானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட நோயாளிகளில் ஆஸ்ரேலியா, ஆஜென்டினா, ஐக்கிய இராச்சியம், கனடா, ஜப்பான், ஹொங்கொங், இந்தியா, அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் உள்ளவர்கள் 14 நாள்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பணிக்குழாம் உறுப்பினர்கள் தொடர்ந்தும் கப்பலில் தங்கியிருக்க வேண்டும் என கப்பல் நிர்வாகத்தினால் அறிவுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# மிலேனியம் ஒப்பந்தம்: ஜனாதிபதிக்கு அறிக்கை

கொழும்பு, பெப். 19

அமெரிக்காவுடனான எம்.சி.சி ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதற்கு 4 பேர் கொண்ட குழு அண்மையில் அமைக்கப்பட்டது. இந்த நிலையில் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டவிசாரணையின் முதற்கட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ம)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## *மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்டளை அதிகாரி கோரிக்கை*

கொழும்பு, பெப். 19

எதிர்வரும் காலங்களிலும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட கட்டளை அதிகாரி லெப்டிணன் லசந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜும்ஆப்பள்ளி வாசலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் லசந்த ஜெயசிங்க மேலும் தெரிவித்ததாவது:'இராணுவத்தினர், பாதுகாப்பு படையினர் ஆகியோர் சாதி, சமயம், இனம், மொழி பார்த்து தமது கடமைகளைச் செய்வதில்லை. மேலும் இன்று எமக்கிருக்கின்ற பெரிய சவால், போதைப் பொருளை ஒழிப்பதாகும். அத்துடன் இளம் சந்ததியினரைப் போதைப் பொருள் பாவனையில் இருந்து பாதுகாக்க வேண்டும். இதனால் அனைவரும் இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் தேசிய பாதுகாப்பை உறுப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## வாழ்வாதார உதவி

வேலணை,பெப்.19

வேலணை பிரதேசத்தில் கணவனை இழந்து, இரு பிள்ளைகளுடன் வசித்துவரும் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு யாழ்ப்பாண நகர் மையம் றோட்டறக்ட் கழகத்தால் வாழ்வாதார உதவி அண்மையில் வழங்கப்பட்டது.

வாழ்வாதார உதவியாக மோர்மிளகாய் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கான அனைத்து உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் றோட்டறக்ட் கழகத்தின் தலைவர்,செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ஜ-222)

# எம் வாழ்வாதாரத்துக்கு எமனாகும் யானைகள்

## நீள்கின்றது நெடுங்கேணி மக்களின் துயரம்

யாழ்ப்பாணம்,பெப்.19

**“போரின் காரணமாக இரு பிள்ளைகளையும் இழந்து, 70 வயதிலும் உழைத்து வாழ நினைத்தால், அரசின் அசமந்தம் காரணமாக யானைகள் எமது வாழ்வாதாரத்தை அழித்து நாசம் செய்கின்றன“ என்று நெடுங்கேணியைச் சேர்ந்த வை.பூபாலசிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“நெடுங்கேணி ஒலுமடுவில் வசிக்கும் நான் எனது வாழ்வாதாரத்துக்கு விவசாயத்தையே நம்பியுள்ளேன். இந்த நிலையில் இன்று (நேற்று) அதிகாலை வீட்டு வளவுக்குள் புகுந்த யானைகள் நடப்பட்டிருந்த மரவள்ளிக் கன்றுகளை முழுமையாக நாசம் செய்துள்ளன. காய்க்கும் பருவத்தில் இருந்த 5 தென்னம் பிள்ளைகளையும் அடியோடு சாய்த்துள்ளன. இதனால் எனது வாழ்வாதாரமே கேள்விக் குறியாகியுள்ளது. எமது வருமானத்தை அழிக்கும் யானைகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு 10 வருடங்களாகக் கோருகின்றோம். ஆனால் எவரும் கண்டு கொள்ளவில்லை“ - என்றார்.

அதேவேளை அவரது வீட்டின் அருகே இருந்த வயலில் அறுவடை செய்து பொதி செய்யப்பட்டிருந்த 25 நெல் மூடைகளை யானைகள் நாசம் செய்துள்ளன. இதனால் 90 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட விவசாயி தெரிவித்துள்ளார். இவ்வாறு நாளாந்தம் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளன. எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-105)

## பணத்துடன் தவறிய ‘பர்ஸை’ ஒப்படைத்தோருக்கு பாராட்டு

சாவகச்சேரி, பெப்.19

பஸ்ஸில் கண்டெடுத்த பணப்பையை (பர்ஸ்) உரியவரின் வீடு தேடிச் சென்று ஒப்படைத்த இருவரின் செயலைப் பலரும் பாராட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் நடந்துள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த நபர், பளைக்குச் சென்று இரவு வீடு திரும்பியுள்ளார். யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்த அவர் சாவகச்சேரியில் இறங்கி வீட்டுக்குச் சென்றார். வீடு சென்ற பின்னர்தான் பணப்பை தவறிய விடயம் அவருக்குத் தெரியவந்தது.

மறுநாள் காலை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் காத்திருந்து, அதே பஸ் நடத்துநரிடம் தனது பணப்பை தவறியதைக் கூறி விசாரித்துள்ளார். தான் அதைக் காணவில்லையென நடத்துநர் கூறியமையால், ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளார்.

அந்தப் பணப்பையில் 23 ஆயிரம் ரூபா பணம், அடையாள அட்டைகள் உட்பட பல பற்றுச்சீட்டுக்கள் இருந்துள்ளன. பளைக்குச் சென்று தேடிவிட்டு மாலை அவர் வீடு திரும்பியுள்ளார். அப்போது அவரது வீட்டுக்கு அருகில் உள்ள சனசமூக நிலையக் கட்டடமொன்றில் அவருக்காகக் காத்திருந்த இருவர், அவரிடம் பணப்பையை ஒப்படைத்தனர்.

“தாம் சாவகச்சேரியில் பணியில் ஈடுபட்டு வரும் புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள். கிளிநொச்சிக்குச் சென்று விட்டு பஸ்ஸில் பயணித்த வேளையில், தமக்கு அருகிலிருந்த இருக்கையில் பர்ஸைக் கண்டோம். பர்ஸினுள் இருந்த அடையாள அட்டையில் காணப்பட்ட முகவரியை வைத்து தங்களைத் தேடி வந்தோம்“ என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-9)

# புதிய கூட்டணி உருவாக்கம் வல்லரசுகளின் சதி வேலை!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.19

தமிழ் மக்களின் தலைமைத்துவமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரக்கூடாது என்ற வல்லரசுகளின் சதி முயற்சியே விக்னேஸ்வரன் தலைமையிலான அணியின் கூட்டணி என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உருவாக்கப்பட்டுள்ள இந்த அணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான அணி அல்ல. கூட்டமைப்பின் அதே கொள்கையோடு செயற்படப் போகும் இன்னொரு அணியே. கூட்டமைப்புக்குப் பின்னுள்ள வல்லரசுகளால் தான் இந்தக் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பு மக்களின் செல்வாக்கை இழந்துள்ள நிலையில் மக்கள் புதிய மாற்று ஒன்றைத் தேடுகின்றனர். அந்த மாற்றும் இந்த வல்லரசுகளின் பிடிக்குள் இருக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட மாற்றுத் தரப்பே இது.

அவ்வாறான கூட்டில் இணைந்து கொள்ளாதது நிச்சயமாக எமக்குத் தாக்கத்தை ஏற்படுத்தாது. இறுக்கமான கொள்கைப் பற்றைக் கொண்ட எங்கள் அமைப்பை இந்தியா போன்ற வல்லரசுகள் விரும்ப மாட்டா. தங்களது நலன்களுக்காகத் தங்களால் கையாளக் கூடிய தரப்புக்களைத் தான் அவர்கள் விரும்புவார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கைகளுக்குத் தலைமைத்துவம் வரக்கூடாது என்பதற்காக மக்களைத் திசை திருப்பிக் குழப்ப எடுக்கப்பட்ட முயற்சியே இதுவாகும். அது நிச்சயம் தோல்வியடையும். - என்றார். (எ-20)



## வழுக்கையாறு இந்து மயானம் சீரமைப்பு

மூளாய்,பெப்.19

நீண்ட காலமாக சீரமைப்பு இன்றிப் பற்றைக் காடுகளாகக் காணப்பட்ட வழுக்கையாறு இந்து மயானம் தற்போது சீரமைக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பற்றதாகவும், அபாயம் நிறைந்ததாகவும் காணப்பட்ட மயானத்தைச் சீரமைக்கும் நடவடிக்கையை மயான அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ளது.

மயானத்துக்கு பாதுகாப்பு வேலி மற்றும் எல்லைச் சுவர் அமைக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் எரி கொட்டகை அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-121)

# இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் மகளிர் தேசிய மாநாடு கண்டியில் எழுச்சியுடன்

கொழும்பு, பெப். 19

இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் மகளிர் தேசிய மாநாடு கடந்த ஒரு வாரமாக கண்டியில் உள்ள இரஜவல இந்து தேசிய கல்லூரியில் எழுச்சிகரமாக இடம்பெற்றது.

சங்கத்தின் மகளிர் பொறுப்பாளர் இராமர் அன்னலெட்சுமி தலைமையில் இடம் பெற்ற இந்த மாநாட்டில் சங்கத்தின் சர்வ தேச இணை அமைப்பாளர் எஸ்.இராஜேந்திரன் இந்தியாவில் இருந்து வந்து பிரதம விருந்தினராக பங்கேற்றதுடன், சங்கத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி இராதாகிருஷ்ணன் மற்றொரு பேராளராகக் கலந்து கொண்டார். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடங்கலாக நாடு முழுவதும் இருந்து பங்கேற்ற சங்க மகளிர்கள் எழுச்சி பேரணியாக வீதி வலம் வந்தனர். அதே போல தமிழ், இந்து கலாசாரங்களை பிரதிபலிக்கின்ற கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுகள் ஆகியவற்றை நடத்தினர். (ம)



# ஐ.நா. தீர்மானங்களில் இருந்து முற்றாக விலகியது இலங்கை

## நாடாளுமன்றம், அமைச்சரவையில் விரைவில் அனுமதி பெறப்படும்

கொழும்பு, பெப். 19

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களில் இருந்து இலங்கை விலகுவதற்குத் தீர்மானித்துள்ளது. 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் கடந்த அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 30/1 மற்றும் 40/1 ஆகியவற்றிலிருந்து உடனடியாக விலகுவதென அரசாங்கம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதுதொடர்பான சிறப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, அரசாங்கத்தின் பல மூத்த அமைச்சர்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். நடைமுறையில் உள்ள அரசியல் யதார்த்தங்களின் கீழ் அவற்றைச் செயல்படுத்துவது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் உடன்படவில்லையென்பதால், அந்தத் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்குவதிலிருந்து விலக தீர்மானித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தீர்மானங்களுக்கு முன்னைய அரசு இணை அனுசரணை வழங்கினாலும், அதுகுறித்துநாடாளுமன்றம் அல்லது அமைச்சரவையில் அது விவாதிக்கப்படவில்லையென்றும், இரண்டுதீர்மானங்களும் தற்போதைய அரசமைப்புக்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வை ஒத்ததாக இருப்பதாகவும் நேற்றுமுன்தினம் விவாதிக்கப்பட்டுள்ளது. கலப்பு நீதிமன்றத்தை நிறுவ்வது, நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்தல் மற்றும் காணாமற் போனவர்களின் அலுவலகத்தை நிறுவுதல் போன்றவை இந்தத் தீர்மானத்தில் அடங்கியுள்ளன. இந்தத் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்குவது, அரசமைப்பை மீறும் செயல் என விவாதிக்கப்பட்டது. அரசாங்கத்தின் இந்த முடிவை அடுத்த வாரமே ஜெனீவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அலுவலகத்துக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.

அதற்கு முன்னதாக இந்த முடிவு அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. (ம)



## சக்கர நாற்காலி கையளிப்பு

வவுனியா,பெப்.19

வவுனியா கூமாங்குளம் பகுதியில் எழுந்து நடக்க இயலாத 83 வயதான மரியாய் சிட்டு என்ற மூதாட்டிக்கு மலசலகூட சக்கரநாற்காலி வழங்கப்பட்டது.

கூமாங்குளம் முதியோர் சங்கத்தினூடாக கிருஷ்ணராஜா இந்திரகுமார் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு இவ்வுதவியை நேற்றுமுன்தினம் வழங்கியிருந்தார்.

மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், கூமாங்குளம் முதியோர் சங்கத் தலைவர் முனுசாமி மற்றும் சமூக ஆர்வலர் ரூபகாந் ஆகியோர் மூதாட்டியின் வீடு சென்று இவ் உதவியை வழங்கினர். (ஐ-222)

## நினைவு பேருரையும் விருது வழங்கலும்

துரைவி 89ஆவதுபிறந்தநாள் விழாவும், 14 ஆவது நினைவுப் பேருரையும், விருது வழங்கல் நிகழ்வும் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வுக்கான துரைவி நினைவுப் பேருரையை ஞானம் இதழின் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரன் 'மலையகச் சிறுகதைகளில் பெண்களின் இருப்பும் பிரச்சினைகளும்" எனும் தலைப்பில் நிகழ்த்துவார்.

நிகழ்வில், 2019 ஆம் ஆண்டுவெளிவந்தஆய்வு நூல்களில் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட, ஈழத்துச் சிறுகதையாளர்கள் பற்றிய தரவுகளைத் தந்த, கொடகே வெளியீடான நந்தினி சேவியரின் 'பிடித்த சிறுகதை' எனும் நூலுக்கு துரைவி விருது வழங்கப்படும். ஆய்வு நூலுக்கான துரைவி விருதை இலக்கியப் புரவலர் ஹாஸிம் ஒமர் வழங்குவார். (க)

# இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அதிபர் நியமனத்தில் சர்ச்சை!

கொழும்பு, பெப். 19

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட இந்து ஆரம்பப் பாடசாலை ஒன்றுக்கு தலைமை அதிபராக வேற்று மதம் சார்ந்த ஒருவரை நியமித்தமைக்கு மலையகத்தின் பல்வேறு இந்து அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அந்த அமைப்புகள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாங்கள் வேறு மதங்களுக்கு எதிரானவர்கள் அல்லர். வேறு மதங்களையும் அவர்களின் எண்ணங்களையும் மதிக்கின்றோம். குறிப்பாக இந்தப் பாடசாலை இந்து ஆரம்பப் பாடசாலையாகும். இதன் பெயரும் இந்து ஆரம்பப் பாடசாலையே. இந்த நிலையில் இந்து ஒருவர் இந்தப் பாடசாலையில் அதிபராக இருக்க வேண்டியது கட்டாயமானதாகும். 90 சதவீதமான இந்து மாணவர்களே இங்கு கல்வி கற்கின்றார்கள். இந்தப்பாடசாலையில்நடக்கும்அனைத்து விடயங்களுக்கும், சமயம் சார்ந்த செயற்பாடுகளுக்கும் அதிபரே முன்நிற்க வேண்டும். இதற்கு இந்து ஒருரே பொருத்தமானவர். வேறு ஒருவரை நியமிக்க முடியாது. பொதுவாக பிரதேச பெற்றோர்கள் பாடசாலைக்குச் சென்று தலைமை அதிபரிடமே தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவார்கள். இவ்வாறான நிலையில் இந்து அற்ற ஒருவர் இதனை எவ்வாறு செய்ய முடியும்.

குறிப்பாக எந்தவொரு பாடசாலைக்கும் தலைமை அதிபரை நியமிக்கும் போதும் அந்தப் பாடசாலையின் மாணவர்களின் பெருபாலானவர்களின் மதத்துக்கு முன்னு ரிமை வழங்க வேண்டும். அது எந்த மதமாக இருந்தாலும் பரவாயில்லை. இதே போல் வேறு மதங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு இந்து அதிபர் ஒருவரை நியமிக்க முடியுமா?. இதனை யாரும் ஏற்றுக்கொள்வார்களா?-என்றுள்ளது. (ம)



## கால்கோள்விழா

சுதுமலை,பெப்.19

சுதுமலை ஈஞ்சடி நாவலர் முன்பள்ளியின் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நிலைய முன்றிலில் நடைபெற்றது.

நிலையத் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் பே.சுபாகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் க. ஸ்ரீகணேசன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் அதிபர் அ.பேரின்பநாயகம், சுதுமலை சிந்மய பாரதி பாடசாலை அதிபர் ம.மகேந்திரம், சண்டிலிப்பாய்க் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் யோ.கேம நளினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் புதிய மாணவர்களை இணைக்கும் கால்கோள்விழா மற்றும் 2019ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன. (ஐ)



# தமிழர்களது கோரிக்கையையும் கருத்தில் எடுக்க வேண்டும் அரசு

## ஞானசார தேரர் கோருகின்றார்



கொழும்பு, பெப்.19
சாய்ந்தமருதில் புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டதைப் போன்று, தமிழர்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கும் கல்முனையிலும் தனிப் பிரதேச செயலகத்தை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சாய்ந்தமருது தனி பிரதேச செயலக பிரிவாகப் பிரித்தமை உண்மையில் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதுதொடர்பில் இப்போது பலரும் அச்சமடைந்து சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் எதிர்ப்பை வெளியிடுகின்றனர். அவ்வாறு அச்சமடையத் தேவையில்லை. இது மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடாகத்தான் நாம் கருதுகிறோம்.

அதேபோல், 30 வருடங்களாக கல்முனையில் தனிப் பிரதேச செயலகம் வேண்டும் என தமிழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இது தொடர்பாக போராட்டங்களைக் கூட தமிழர்கள் மேற்கொண்டிருந்தார்கள். சாய்ந்தமருது மக்களுக்கு செய்த சேவையைப் போல, இந்த தமிழ் மக்களுக்கான கோரிக்கையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசிடம் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

கல்முனையில் தனியான பிரதேச சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக இருக்கிறது. ஸஹ்ரானின் சம்பவத்தை வைத்துக் கொண்டு இந்த விடயத்தில் சிலர் கருத்து வெளியிட்டாலும், அரசின் தற்போதைய செய்றபாடு தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. என்றார். (எ)

## மின்தடை

யாழ்ப்பாணம்,பெப்.19
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை வியாழக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி காலை 8மணியிலிருந்துமாலை 5மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** மதவுவைத்தகுளம் கிராமம்மற்றும் சாம்பல்தோட்டம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசாசெல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## சிவராத்திரி தின அறநெறிச் சமூக விழா

சாவகச்சேரி,பெப்.19
பச்சிலைப்பள்ளி மல்வில்கிருஷ்ணன்கோவிலின் மகா சிவராத்திரி தின அறநெறிச் சமூக விழாநாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார சமூகபாதுகாப்புஅமைச்சின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.யோகநாதன், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டத்தின் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மூத்த சமூகசேவை உத்தியோகத்தர் சு.ஜெயானந்தராசா, கௌரவ விருந்தினர்களாகயாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பௌதீகவியல் ஆசிரியர் ந.கபி லரூபன், மல்வில் சக்தி அக்ரோ இன்ரநஷனல் பிறைவேற் லிமிட்டட் முகா மையாளர் எம்.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், மற்றும் பரிசளிப்புகள் என்பன நடைபெறவுள்ளன. (ஐ-9)

## 26முதியவர்களுக்கு சங்கம் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19
யாழ். பிரதேச முதியோர் சங்கம் நடத்திய முதியோர் கௌரவிப்பு விழாவில் யாழ். பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் முதியோர் சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 26 முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சிறந்த சமூக சேவையாளர்களாக விக்ரர் அலெக்சாந்தர், திருமதி தேசிங்கராசா யோகேஸ்வரி, டி.சி.சி.சந்தியாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை சில்வெஸ்ரர், கிறகரி அல்போன்ஸ், கந்தையா யோகரட்ணம், பயஸ் ஆனந்தக்குமார் ஜிலியன், யோ.வி.ஜிவராஜன், தி.மைக்கல், திருமதி.சசிரேகா வரதராஜன், கார்த்திகேசு நாகலிங்கம், விநாயகன் மாணிக்கம் ஆகியோரும், சிறந்த திறமை யுள்ள முதியவர்களாக திருமதி.கெங்கேஸ்வரன் அமிர்த செல்வநாயகி, க.சரவணபவானந்தன், எலியாஸ் வரப்பிரகாசம், திருமதி செபஸ்தியாம்பிள்ளை இராஜேஸ்வரி, கந்தர் திருவம்பலம், ஜொசேப்பு சிப்ரியன், எஸ்.செபஸ்தியாம்பிள்ளை, ஜே.ஜோசேப்பாலா, எம்.செபஸ்தியாம்பிள்ளை, குமாரன் ஐயாத்துரை, சண்முகநாதன் யோகநாதன் ஆகியோரும், சிறந்த நாட்டு வைத்தியராக திருமதி செல்வராசா நாகரட்ணமும், சிறந்த ஊடகவியலாளர்களாக சூசைப்பிள்ளை யேசுதாசன், மரியநாயகம் ஞானசீலன், அ.க.ஏணஸ்ட் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (க-51)

*வவுனியா நகர் பகுதியில்*

## பொதுமலசலகூட காணியை அடாத்தாகப் பிடித்து மதில்!



வவுனியா, பெப். 19
வவுனியா நகர மத்தியில் பொது மலசலகூடத்துக்கு அருகில் உள்ள காணியை சிலர் அடாத்தாகப் பிடித்து மதில் கட்டியுள்ளனர் எனக் குற்றச்சாட்டு முன்வை க்கப்பட்டுள்ளது. வவுனியா பழைய பஸ் நிலையத்துக்குப் பின்புறமாக பொது மலசலகூடத்துக்கு அருகில் உள்ள காணியை சிலர் மதில் கட்டி அடாத்தாகப் பிடித்திருக்கின்றனர் என்று கடந்த மாதம் இடம்பெற்ற நகரசபையின் அமர்வில் நகரசபை உறுப்பினரால் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த நிலையில் அந்தக் காணி நகரசபைக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பாக சபையில் கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றிருந்தன. காணி நகரசபைக்கு உரித்தானதாயின் மதிலை அகற்ற உடன் நடவடிக்கை எடுப்பேன் என்று செயலாள்ர் கூறியிருந்தார். எனினும் குறித்த காணி தொடர்பில் நகரசபை எவ்வித நடவடிக்கையும் எடுக்காதுள்ளமை தொடர்பாக நகரசபை தலைவரிடம் கேட்டபோது அந்தக் காணி அரச காணி எனவும் நகர சபைக்கு உரித்தானதல்ல எனவும் தெரிவித்தமை குறிப்பிடதக்கது. (ம-110)

## சிவராத்திரி நாளில் நூல் வெளியீடு

மூதூர்,பெப்.19
என்.கே.எஸ். திருச்செல்வம் எழுதிய " பண்டைய தமிழ் நூல்களில் சிவன் "என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தில் நடைபெறும். இந்த நூலுடன் இலங்கை மண்ணில் புதைந்து கிடக்கும் 70 லிங்கங்கள் உட்பட 170 லிங்கக் கோயில்களை அடையாளப் படுத்தும் வகையில் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் எழுதிய " ஈழத்துலிங்காஷ்டகம்" 180 வரிகள் அடங்கிய பாடலும் அரங்கேற்றப்படவுள்ளது. திருக்கோணேஸ்வரம் ஆலய நிர்வாக சபையினர் மற்றும் திருகோணமலை இராவண சேனை அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெறும். (க-40)



யாழ்ப்பாணம் சண்முகா முன்பள்ளி, புனித யூட் முன்பள்ளி, கலைவாணி முன்பள்ளி மற்றும் காந்தி முன்பள்ளி ஆகியற்றைச் சேர்ந்த சிறுவர்கள் யாழ்ப்பாணம் விமான நிலையத்தை கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டனர். (க)

# முஸ்லிம் தலைவர்கள் காட்டிய பாதை தவறு

## வடமேல் ஆளுநர் வேதனை

கொழும்பு, பெப். 19

இதுவரை காலமும் முஸ்லிம் தலைவர்கள் எனக் கூறிக்கொள்ளும் சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் முழு முஸ்லிம் சமூகத்தினையும் தவறான முறையில் வழிநடத்தியுள்ளார்கள் என்பது தற்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் முஸ்லிம் உலமாக்களுக்குத் தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு நிகழ்வொன்று நேற்று குருநாகல் மாவட்டம் சியம்பலகஸ்கொடுவா பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கொலபகம புராண விஹாரையின் விகாராதிபதி கல்லெஹபிடிய பேமரத்ன தேரர், குருநாகல் மாவட்ட அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.சுஹைப் (தீனி), செயலாளர் மௌலவி எஸ்.ஐ.எம். ஹாபீல் (ரவ்லி), முன்னாள் குளியாபிட்டிய வளையக் காதி நீதிபதி மௌலவி ஸித்தீக், ஓய்வுபெற்ற கிராம சேவகர் அபூபக்கர் பஹ்ஜி, முன்னாள் இராணுவ அதிகாரி முஹம்மட் றாசிக் உள்ளிட்ட குருநாகல் மாவட்ட உலமாக்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

அங்குத் தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தொடர்பில் பல வதந்திகள் பரப்பப்பட்டன. ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் இலங்கை நாடுமற்றுமோர் மியன்மார் ஆகிவிடும், முஸ்லிம்களின் உரிமைகள் பறிக்கப்படும்.

முஸ்லிம்கள் நசுக்கப்படுவார்கள் என மேடை மேடையாகக் கூவித் திரிந்தார்கள். ஆனால் தற்பொழுது கோத்தாபயவின் ஆட்சியின் கீழ் முஸ்லிம்கள் எவ்வளவு நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதை அனைவரும் உணர்வீர்கள். 72ஆவது சுதந்திர தின நிகழ்வில் கூட ஜனாதிபதியின் உரை சிறுபான்மை, குறிப்பாக முஸ்லிம்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்தது என்பதை நாம் அனைவரும் உணர்ந்தோம்.

நான்கு இராசதானிகளைக் கொண்ட, பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய இந்த வடமேல் மாகாணத்தில் முஸ்லிம் ஒருவரை ஆளுநராக நியமித்தமையும், ஜனாதிபதி முஸ்லிம்களுக்குச் செய்த ஒரு கௌரவமாகவே நாம் பார்க்கிறோம்.

தற்பொழுது இதனையும் தாண்டி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குருநாகல் மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் தலைவரையும், ஜனநாயக ரீதியில் பெற்று அழகுபார்க்க ஜனாதிபதி ஆர்வமாகவுள்ளார். இதன் அடிப்படையிலேயே இம்முறை பொதுத் தேர்தலில் என்னைப் போட்டியிடுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாற்பது வருடகால அரசியல் அனுபவம் மிக்க நான், தூதுவர், மேயர் உள்ளிட்ட பல அரசியல் அதிகாரங்களிலிருந்துள்ளேன், எனக்கு அரசியலில் உழைப்பதற்கு எந்தவித அவசியமும் இல்லை.

என்னுடைய குடும்பத்திற்கான கடமைகள் அனைத்தும் முடிந்துவிட்டன. அதைப்பற்றிச் சிந்திப்பதற்கும் எனக்கு தற்பொழுது அவசியம் இல்லை. நான் குருநாகல் மாவட்டத்தின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு கொழும்புக்குப் போய்விடுவேன் என சிலர் விமர்சிக்கின்றனர். எனக்குக் கொழும்பில் கட்டிப் பாதுகாக்க எதுவும் இல்லை. எனது ஒரே எதிர்பார்ப்பு, தற்பொழுது முஸ்லிம் சமூகம் இழந்துள்ள முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பெற்று மக்களுக்குச் சேவை செய்வதோ.

ஆகவே நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள் நான் உங்களுக்கு ஒரு வாக்குறுதியை இன்று வழங்குகிறேன். என்னை குருநாகல் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால், எனது ஜனாஸா இந்த குருநாகல் மண்ணில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்-என்றார். (ம)



### யாழ் தொழில்நுட்பக் கல்லூரி வளாக

# தாக்குதலைக் கண்டித்து மாணவர்கள் கவனவீர்ப்பு




யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்துக்குள் புகுந்து மாணவர்கள், ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும், கல்லூரியின் கற்றல் கற்பித்தல் பணியின் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும் நேற்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




"அதிகரிக்கும் வன்முறையின் உச்சமாக தற்போது கல்லூரிகளுக்குள் காடையர்கள்புகும்அளவுக்குநிலைமை மோசமடைவது எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக மாற்றும். இதனை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துவதோடு, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்.

தாக்குதலில் ஈடுபட்டவர்களில் ஒருவரைப் பிடித்துக் கொடுத்தோம். ஏனையோரைக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு கல்லூரியின் வளாகத்தில் ஆரம்பித்து சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது. "மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய், தாக்குதல்தாரிகளைச் சட்டத்தின் முன்பாக நிறுத்து, அரச ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்" போன்ற வாசகங்களைத் தாங்கியவாறு மாணவர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் கருத்துத் தெரிவித்த கல்லூரியின் பணிப்பாளர், "சம்பவம் தொடர்பாக முறையாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவரில் ஒருவரை நாம் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தோம். சம்பவம் இடம்பெற்று நான்கு தினங்கள் கடந்தும், அதற்கு மேல் எந்த முன்னேற்றமும் இல்லை. அதனாலேயே இந்தப் போராட்டத்தை நடத்துகின்றோம்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் , மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டவர்களுக்கு மனுக் கையளிக்கவுள்ளோம்" என்றார்.

**பின்னணி**

கடந்த வாரம் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு வாய்த்தர்க்கமாக மாறி அடிதடியில் முடிந்தது.

அதனைத் தொடர்ந்து வாள்வெட்டுக் குழுவினர் சென்று கல்லூரியில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர். இதில் ஆசிரியர்கள் மூவர் காயமடைந்தனர். வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த ஒருவர் அகப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-105,20,7)

# சொல்வதைச் செய்வோம்

## தமிழ் மக்கள் கூட்டணி கூறுகிறது

யாழ்ப்பாணம், பெப்.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் போன்று மக்களை ஏமாற்றி மக்கள் விரோதச் செயற்பாடுகளில் தமிழ் மக்கள் கூட்டணி ஈடுபடாது என்று தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் கொள்கை பரப்புச் செயலாளர் க.அருந்தவபாலன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்குச் சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடுவது ஒன்று நடைமுறையில் செய்வது ஒன்று. அதாவது சொன்னவைக்கும், செய்தவைக்கும் இடையே சம்பந்தம் இருக்காது. இதுவே அவர்களுக்கும் எமக்கும் இடையே உள்ள பிரச்சினை.

சி.வி.விக்னேஸ்வரன் அந்தக் கட்சியில் இருந்து விலகுவதற்கு இதுவே காரணமாக அமைந்தது.

இந்த நிலைமையை மாற்றி மக்களுக்கு எதைச் சொன்னோமோ அதைச் செய்ய வேண்டும். வெளிப்படையாகச் செயற்பட வேண்டும்.

மக்களுக்கு நேர்மையாக இருக்க வேண்டும். அவ்வாறாகவே எமது செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதைத்தான் மக்களிடையே நாம் கொண்டு செல்கின்றோம். நாங்கள் சொல்வதும் செய்வதும் ஒரே மாதிரியாக இருக்கும். அந்தவகையிலேயே எமது அரசியல் நடவடிக்கைகள் இருக்கும்-என்றார். (எ- 20)

# ஊடகவியலாளர்களுக்கு உதவிகள்

கொழும்பு, பெப். 19

வெகுசன ஊடகவியலாளர்களுக்கு சலுகை வழங்குவதற்கு தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய நாடு முழுவதிலிருந்தும் அனைத்து வெகுசன ஊடகவியலாளர்களின் தகவல்களையும் சேகரிக்க அந்த அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்படும் வெகுசன ஊடகக் கொள்கையின்படி இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்றகாக கடந்த ஆண்டு அல்லது இந்த ஆண்டு அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்ட வெகுசன ஊடகவியலாளர்களிடம் இருந்து மாத்திரம் தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

அதற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் இணையத்தளம் ஊடாக பதிவிறக்கம் செய்துகொள்ள அல்லது அமைச்சுக்கு வருகை தருவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பூர்த்தி செய்த படிவத்தை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் 'பணிப்பாளர் (ஊடகம்), தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல.163, 'எதிசிதி மெதுர', கிருலப்பனை வீதி, பொல்ஹேன்கொட, கொழும்பு - 05. ' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (ம)

# சவேந்திர மீதான தடைக்கு மங்கள, ரணில் காரணமாம்

## நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் டியூ.குணசேகர கண்டுபிடிப்பு



**கொழும்பு, பெப். 19**

**‘இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்திருக்கும் பயணத் தடையானது எமது நாட்டின் கௌரவம் மற்றும் இறையாண்மைக்கு விடுக்கும் அச்சுறுத்தலாகும். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு கடந்த அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவும், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுமே காரணமாகும்’ - இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.**

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘போர்க்குற்றம் தொடர்பாக இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா நிறைவேற்றிய பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதற்கான ஆவணத்தில் மங்கள சமரவீர கைச்சாத்திட்டிருந்தார். ரணில் விக்கிரம சிங்கவின் ஆலோசனைக்கமையவே மங்கள சமரவீர அதில் கைச்சாத்திட்டிருந்தார். அன்று மங்கள சமரவீர கைச்சாத்திட்டதன் பின் விளைவையே தற்போதும் நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்’ - என்றார். (ம-22)

## இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

சாவகச்சேரி,பெப்.19

கலாசார அலுவல்கள், திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பிரதேச, மாவட்ட, தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த படைப்பாளிகள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஜனவரி 31 ஆம் திகதியில் 6-7 வயதுள்ள மாணவர்கள் பாலர் பிரிவுக்கு கையெழுத்துப் போட்டியும், 8-10 வயதுள்ள மாணவர்கள் சிறுவர் பிரிவில் கவிதை, பாடல் மற்றும் கையெழுத்துப் போட்டிகளும், 11-15 வரையான வயதுள்ள மாணவர்களுக்கு “அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும்கலை” என்னும்தலைப்பில் கட்டுரை, கவிதை மற்றும் பாடல் ஆகிய போட்டிகளும், வயது 16-18 வரையான மாணவர்களுக்கு “அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை” என்னும் பொருளில் கட்டுரை, பாடல், நயத்தல், நாடகப்படம், பிரதி எழுதுதல் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பாடல் ஆக்கப் போட்டி, நாட்டார் கலை பற்றிய ஆய்வுக்கான கற்றல் போட்டி, சிறுகதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி, கவிதை எழுதுதல், இலக்கிய விவரிப்பு போட்டி ஆகியவற்றிலும் பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## உதயங்கவினது மனு நிராகரிப்பு 26 வரை நீடிக்கப்பட்டது மறியல்



கொழும்பு, பெப். 19

மிக் 27 ரக போர் விமானங்கள் நான்கைக் கொள்வனவு செய்யும்போதும் அதே ரக விமானங்கள் நான்கை மீளத் திருத்தும்போதும், இடம்பெற்ற பணமோசடிகள் குறித்த வழக்கில் பிரதான சந்தேக நபராகக் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அவருக்கான விளக்கமறியல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணைகளின்போதே நீதிவான் ரங்க திஸாநாயக்க மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

மேற்படி விசாரணைகளை முன்னெடுத்த எவ்.சி.ஐ.டியின் பிரதான விசாரணை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரன்சிஸ், விசாரணைப் பொறுப்புக்களில் இருந்து மாற்றியமை தொடர்பில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம், பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவிடம் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பியது.

அத்துடன், கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த ஆண்டு ஜனவரி வரை இவ்விவகாரத்தைக்கையாண்ட பிரதான விசாரணை அதிகாரி நிஹால் பிரன்ஸிஸ், அவரை வழிநடத்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பவித்ர தயாரத்ன ஆகியோரை அந்தப் பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட்டமைக்கான காரணம், அவர்களை மீள உள்ளீர்த்து அவர்கள் ஊடாக அது குறித்த விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியுமா என்ற விடயங்கள் குறித்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பதில் பொலிஸ்மா அதிபருக்கு நீதிவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டார்.

உதயங்க வீரதுங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா மன்றில் பிரசன்னமாகியிருந்தார். தற்போது இந்த விவகார விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டி சார்பில்உதவிப்பொலிஸ் அத்தியட்சர் விஜித பெரேரா, பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் சந்திமா அருமபெரும, பொலிஸ்பரிசோதகர் சஞ்ஜீவ ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அவர்களுடன் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் துஷித் முதலிகே மற்றும் சிரேஷ்ட அரச சட்டவாதி உதார கருணாதிலக ஆகியோரும் முன்னிலையாகினர். இதன்போது உதயங்க வீரதுங்கவின் பிணை மனுக் கோரிக்கையை நிராகரித்த நீதிவான், வழக்கை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்தி வைத்ததுடன், அன்றைய தினம் வரை அவருக்கான விளக்கமறியலையும் நீடித்தார். (ம-22)

## பணம் பறிக்கும் எம்.பியின் மகன்

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் பணம் பறிக்கும் குண்டர் போல செயற்படும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன் பற்றிய செய்திகளை சிங்கள ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

பிரபல கல்லூரியில் இந்தச் சம்பவம் நடந்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை சிற்றுண்டிச்சாலையில் மாணவர்களிடம் பணம் பறித்து வரும் உயர்தர மாணவன் ஒருவர், “நான் யார் தெரியுமா? எம்.பியின் மகன்” என மார்தட்டி வருகிறார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவனின் தந்தையான எம்.பி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த ‘மிளகாய்த் தூள்’ எம்.பியென சூசகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## இளம் ஊடகவியலாளர்களுக்கு ‘மீடியாகோர்ப்ஸ்’ புலமைப்பரிசில்


யாழ்ப்பாணம்,பெப்.19

இளம் ஊடகவியலாளர்களுக்கான மீடியா கோர்ப்ஸ் புலமைப்பரிசில் செயற்றிட்டம் நீர்கொழும்பில் அண்மையில் ஆரம்பித்து நடைபெற்றது. இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை இளைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடனும், கைபேசியைப் பயன்படுத்தி கதைகூறும் ‘மோஜோ’ பயிற்சியை உள்ளடக்கியதாகவும் இந்தச் செயற்றிட்டம் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் பேராசிரியர் பத்மஸ்ரீ வணிகசுந்தரவின் வருகையைத் தொடர்ந்து செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. செயற்றிட்டம் தொடர்பான அறிமுகம் மற்றும் மேலதிக விளக்கங்கள் நிறுவனத்தின் செயற்றிட்ட ஊழியர்களால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தப் பயிற்சியில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களுக்கு மோஜோ உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்தச் செயற்றிட்டம் அனுபவம் வாய்ந்த வளவாளர்களான ஜி.சந்திரசேகர, ஷான் விஜேதுங்க, தாரிணி பிரிஸ்சிலா, ஷிஹார் அனீஸ், சி.சாரங்க, மொஹமட் பைறூஸ், கபில ராமநாயக்க, மொஹமது அஸ்வர் மற்றும் ருவான் போகமுவ ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டது.

பயிற்சியின் ஒரு பகுதியாக ஊடகவியலாளர்கள் அனைவரும் அண்மையில் உள்ள கிராமத்துக்கு



அழைத்துச் செல்லப்பட்டு கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி ஒரு வீடியோ கதை உருவாக்குவதற்கான பிரயோகப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு ஊடகவியலாளரும், இறுதியில் ஒரு வீடியோ கதையை உருவாக்கினர். செயற்றிட்ட முடிவில், அந்தக் கிராமத்தில் காணப்படும் சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமான 20 வீடியோக் கதைகள் உருவாக்கப்பட்டன.

பயிற்சியைத் தொடர்ந்து பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் வேறுபட்ட கலாசார பின்னணியைக் கொண்ட ஏனைய ஊடகவியலாளர்களுடன் களப் பயணத்தை மேற்கொண்டு, சமூகத்தின் கலாசாரம், நம்பிக்கை மற்றும் செயற்பாடுகளைப் புரிந்து கொண்டு அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளை பல ஊடகக் கதைகளாக உருவாக்கி அவற்றை சமூக ஊடகங்களினூடாக வெளியிடுவர். மீடியாகோர்ப்ஸ் செயற்றிட்டத்தினூடாக இதுவரை சுமார் 112 இளம் ஊடகவியலாளர்கள் பயனடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கூட்டமைப்பை சிதைக்க பல்வேறு முயற்சிகள்

### சித்தார்த்தன் கவலை

வவுனியா, பெப். 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைத்து, தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தவேண்டும். இதற்காக பல தரப்புக்கள் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

ரெலோ அமைப்பின் பொன்விழா மாநாடு வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி. 2001ஆம் ஆண்டு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தாலும், 2011ஆம் ஆண்டுதான் நாம் அதில் இணைந்து கொண்டோம். தமிழ் மக்களின் ஒற்றுமை கருதி நாங்கள் இணைந்து கொண்டோம். கூட்டமைப்பை சிதைத்து விட வேண்டும் என்ற நோக்குடன் பல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழர்களைப் பலவீனப்படுத்த வேண்டும் என்று சிந்திக்கின்ற தரப்புக்களே இவ்வாறு செய்து கொண்டிருக்கின்றன.

மக்களின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும். மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றார்கள். என்றும் இருப்பார்கள். அந்த நம்பிக்கையில் நாங்கள் விடுதலைக்கான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் ஒற்றுமையாக இந்தப் பயணத்தில் முன் செல்வோம்-என்றார். (ஒ.5,11ஏ)


## நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது!

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் மத விடயதானங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் தர்மாசார்ய பரீட்சையில் சித்திபெற்றவர்களைஇலங்கைஆசிரியர்சேவையின் தரம் மூன்று வகுப்புக்கு இணைத்துக் கொள்வதற்காக பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் 2ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிட்ட நேர்முக பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இதன்படி குறித்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (ம)

## விஞ்ஞான சங்கமம்

மனவளக் கலை தலைமையகம் நடத்தும், விஞ்ஞானச் சங்கமம் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள அறிவுத்திருக் கோவிலில் நடைபெறும். மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக பேராசிரியர் வி.சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-105)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 28 . 01 . 1939 — இறப்பு 16 . 02 . 2020

### வைத்திலிங்கம் சுவாமிநாதன் B.A

(இளைப்பாறிய உதவி தொழில் ஆணையாளர்)

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் தனிநாயக முதலி வழித்தோன்றலுமாகிய வைத்திலிங்கம் சுவாமிநாதன் 16.02.2020 ஞாயிற்றுகிழமை அன்று கொழும்பில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - ஞானமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் ரதிதேவியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான இலட்சிமிப்பிள்ளை, தையல்முத்து கணபதிப்பிள்ளை மற்றும் குமாரசாமி, முத்துப்பிள்ளை, கனகசபை முத்துகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, ஞானராஜா, சுந்தரராஜா, செல்வராஜா, நடராசா, குமாரசுவாமி, தர்மலிங்கம் மற்றும் சோதீஸ்வரி (திரவியம்), லோகராஜா, சிவராஜா, கண்மணி, பிரேமலா, சபராணி, தனபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் Dr. ஞானசேகர் (Australia) பகீரதன் (UK), மோகனா (UK), Dr. கல்பனா (Australia), செந்தூரன் (UK), சோபனா (UK), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தனுஷா (Kugan, Motors), துளசி (UK), மயூரன் (UK), ஸ்ரீஸ்காந்தரன் (Australia) Dr.சிந்தியா(UK), ஹரன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஷிகேஷன், ஹரிஸ்ரீமன், கௌஷாலி, சேயூரன், மதுமிதா, மானசி, இஷான் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இறுதி அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் (171 / 8 Edward Lane பௌத்தாலோக்க மாவத்தை கொழும்பு - 04) இன்று (19.02.2020) புதன்கிழமை முதல் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (20.02.2020) வியாழக்கிழமை காலை 09.30மணிக்கு நடைபெற்று பின்னர் பொறளை கனத்தை பொது மயானத்தில் பிற்பகல் பகல் 12.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

Dr. Gnanasegar +94(0)725268020
Dr. Kalpana +94(0)773420580
Mr.Senthuran

(cs.31337)
(13.17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 04 . 1932 — மறைவு 17 . 02 . 2020

### திருமதி துரைசிங்கம் சிவனேஸ்வரி

(கனகம்மா)

ஆவரங்கால் சிவன்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் சிவனேஸ்வரி (கனகம்மா) கடந்த 17.02.2020 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் பாசமிகு மனைவியும், இரத்தினம், காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம், தங்கராசா ஆகியோரின் மைத்துனியும், நவரட்ணராணி, மனோன்மணி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் விநாயலிங்கம், வரதலக்ஷ்மி, இரவீந்திரா, கருணாகரன், நிமலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீஸ்கந்தராசா, தங்கராசா, கேதீஸ்வரி, கணேஸ்வரி, மாணிக்கவாசகர், திருச்செல்வம், கஜந்தினி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுந்தரராஜன், சுகுமார், சுசீந்திரா, சுரேந்திரன், சுரேஸ்குமார், தயானந்தன், ஜெயந்தினி, ஜெயந்தன் ஆகியோரின் பெரியதாயாரும், லக்சிகா, துளசிஜா, நீபன், வைஸ்ணவி, விதுர்சனா, சிந்துஷன், விதுர்ஷா, விதுஜென், சியானிஷா, கோபிகன், துசிகன், பிரகலை, வேணுகானன், ஆதவன், திருசினி, துவாரகன், வேணுயன், துஷாந்தன், துசிந்தன், துசால், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (20.02.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்வீதி,
ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

077 022 0683, 077 983 7275



அன்னை மடியில் 01 . 06 . 1956 — ஆண்டவன் மடியில் 12 . 02 . 2020

### தர்மரட்ணம் பாலசுப்பிரமணியம்

இலங்கை, யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மரட்ணம் பாலசுப்பிரமணியம் கடந்த 12.02.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மரட்ணம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், கஸ்தூரி, கஸ்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சறோஜினிதேவி, சாரதாதேவி, சர்வானந்ததேவி, சுசிலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் அருமைத் தம்பியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தெய்வேந்திரம், நாகேந்திரம், சிவபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சுரேஸ்குமார், துஸ்யந்தினி, துஜிந்தா மற்றும் துஸ்யந்தன், கஜன், தேனுகா, திபானா, பிரபாகரன், நிறைஞ்சலா, துலக்சினி, யாழினி, யசிந்தன், ஜேம்ஸ் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2020) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. அன்னாரின் இறுதி நினைவுகோரல் சகோதரியான தெய்வேந்திரம் சாரதாதேவியின் (சாரதா) வீட்டில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவப்புலம் வீதி, 4 ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(சுப்ரா உணவகம், சங்கானை)

தகவல்:- மைத்துனர்
சு.தெய்வேந்திரம்.

077 282 6090

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மாபெரும் மக்கள் பணி திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வு 19.02.2020 புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது

THIYAHIE CHARITABLE TRUST

**1) தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 90 லட்சம் ரூபாவில் அமைத்துக்கொடுக்கப்பட்ட Clinic Center இன்று (4.30p.m) திறந்து வைக்கப்பட இருக்கின்றது**




## 2) கோப்பாயில் அமைக்கப்பட்ட வீடமைப்புத்திட்டம்

### தியாகி வீடமைப்புத் திட்டம்
### තියාහි නිවාස ක්‍රමය
### THIYAHI HOUSING SCHEME





**3) 22 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நுழைவாயில்**




**4) அரியாலையில் நாய்கள் காப்பகம் ஒருகோடி ரூபாய் செலவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது**



முதற்கட்டமாக ஐந்து பயனாளிகளுக்கு தலா 1 பரப்பு காணியில் அமைத்துக்கொடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் கையளிக்கப்பட இருக்கின்றது இதன் மொத்த பெறுமதி 1 கோடி 25 லட்சம். (10.30 a.m)

ஆனைப்பந்தி எம்.எம் வித்தியாலயத்திற்கு நுழைவாயில் மற்றும் முன்பக்க மதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு. (9 a.m)

அத்துடன் இந்நிகழ்வில் விசேட தேவையுள்ளவர்களுக்கு Wheelchairs வழங்கப்படவுள்ளது.

மகளிர் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் பயனாளிகள் 30 பேருக்கு மொத்தமாகப் 10 லட்சம் ரூபா வைப்பில் இடப்பட்ட வங்கிப் புத்தகமாக வழங்கப்பட இருக்கின்றது.

(IN/12608)(11,17)

**தியாகி அறக்கொடை நிறுவனம்**

மாற்றம் என்பது, தொடக்கத்தில் கடினமானதாகவும், நடுவில் குழப்பமானதாகவும், இறுதியில் சிறந்ததாகவும் உள்ளது.



ராபின் சர்மா





# “மரபுரிமைகளை தேடி...”

கணபதி சர்வானந்தா

எண்ணிம (டிஜிட்டல்) ஆவணப்படுத்தலில் கடந்த பதினான்கு ஆண்டுகளாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட நூலக நிறுவனம், ஈழத்துத் தமிழ்ப்பரப்புக்கு அளப்பரிய பணிகளைச் செய்ததன் வெளிப்பாடாக இணையத்தில் ஒரு பெரிய கலைக் களஞ்சியமே உருவாகி இருக்கிறது. அந்த வகையில், அந்த வெற்றியை கொண்டாடும் முகமாகவும், அத்துடன் அந்தக் களஞ்சியத்தை மேலும் வலுவூட்டவுமான பல நடவடிக்கைகளை நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. அதில், நூலக நிறுவனம் தனது செயற்பாடுகளையும், அதன் முக்கியத்துவத்தையும் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும், ஆவணங்களின் முக்கியத்தை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்ற வகையில் “ஆவணப்படுத்தல்”, ஓலைச் சுவடிகள் கண்காட்சியும் கலந்துரையாடலும் என்ற விடயங்களை உள்ளடக்கி , “மரபுரிமைகளைத் தேடி”என்று அதற்குத் தலைப்பிட்டு ஒரு நிகழ்வை எதிர்வரும் 22 - 23 திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கிறது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மரபுரிமை பிரார்த்தனை மண்டப மேல்மாடியில் காலை 10 மணி தொடக்கம் மாலை 4. 30 மணிவரை நடைபெறவிருக்கும் இந் நிகழ்வின் ஆரம்ப தினத்தன்று காலை கண்காட்சித் தொடக்கமும் , ஆவணப் பங்களிப்பாளர்களுக்கான மதிப்பளிப்பும் என்னும் நிகழ்வைத் தொடர்ந்து மாலை, “மறைந்த ஈழத்து ஆவணங்களை நோக்கி” என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடலும், இரண்டாவது தினமான 23.02.2020 அன்று காலை கண்காட்சியும் பிற்பகல் 1.30 மணிக்கு “மறைந்து செல்லும் மரபுரிமைகளை ஆவணப்படுத்தல்”என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடலும் நடைபெறவிருக்கின்றன.

‘எண்ணிம’ ஆவணக் காப்பகம் ஏன் வேண்டும்? அதன் முக்கியத்துவம் என்ன? என்ற கேள்விகளுக்கு எம்மிடம் எண்ணிலடங்காப் பதில்கள் உண்டு. அதில் ஒன்று யாழ் மாநகரப் பொது நூலக எரிப்பு. இப்படியானதொரு நடவடிக்கை எமக்கு அவசியம் என்று 1970 களில் நடைபெற்ற “யாழ்ப்பாண பொது நூலகம்”எரிக்கப்பட்ட அனர்த்தத்துக்குப் பின்னால் நாம் உணர்ந்திருக்கிறோம். அது மட்டுமல்ல எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற படிப்பினையையும் அது விட்டுச் சென்றிருக்கிறது. அத்தோடு வருடந்தோறும் வருகின்ற “நூலக எரிப்புத்தினம்” எமக்குப் பல விடயங்களை அறிவுறுத்துவதோடு, எம்மை உறங்காது விழிப்போடு இருக்க வேண்டிய அவசியத்தையும் நினைவுறுத்துகிறது.

அது மட்டுமல்ல, அண்மையில் மறைந்த வன்னிவாழ் கலைஞன் முல்லை யேசுதாசன் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து ஒரு தொகுப்பை “நீலமாகிவரும் கடல்” என்ற தலைப்பில் 2003 ஆம் ஆண்டு நிதர்சனம் வெளியிட்டிருந்தது. அதில் ஒரு சிறுகதையை எடுத்துப் பிரசுரித்து அவரை நினைவு கூரலாம் என்று எண்ணி குறிப்பிட்ட அந்த நூற்பிரதியை எங்கும் தேடினோம். ஈற்றில் இணைய நூலகமான “நூலகம்” எமக்குக் கை கொடுத்தது. அந்த நூல் அங்குதான் ஆவணமாக்கப் பட்டிருந்தது. இணைய நூலக நிறுவனத்தினரின் பணிக்கு இது ஒரு சிறிய சான்று எனலாம். 2004 இல் தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் பணி பல்கிப் பெருகி இன்று உலகத் தமிழர்களுக்கு ஒரு இணையப் பெட்டகமாகத் திகழ்கின்றதென்று சொல்லுவோமானால் அது அவர்கள் பணியை மிகைப்படுத்துவதாக அர்த்தமல்ல. எங்கிருந்தும் , எந்த வேளையிலும் எத்தனை புத்தகங்களை வேண்டுமானாலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். அந்த வகையில் ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்களின் பல்லாயிரம் ஆவணங்கள் அங்கே புதைக்கப்பட்டிருக்கின்றன. 2019வரை 11,000 க்கும் அதிகமான பல்லூடக ஆவணங்கள், 500 க்கும் அதிகமான கையெழுத்து ஆவணங்கள், 250 க்கும் அதிகமான ஒலிப்பதிவுகள், 1900 க்கும் அதிகமான குறுங்கால ஆவணங்கள்,400க்கும் அதிகமான வாய்மொழி வரலாறுகள் 5200 க்கும் அதிகமான புகைப்படங்கள், 2200க்கும் அதிகமான கல்வி வளங்கள், 73000க்கும் அதிகமான அச்சு வடிவ ஆவணங்கள், 9500க்கும் அதிகமான நூல்கள், 11700க்கும் அதிகமான சஞ்சிகைகள், 45600 க்கும் அதிகமான பத்திரிகைகள், 6200க்கும் அதிகமான மலர்களும் பிரசுரங்களும், 4000 எழுத்தாளர்கள், 3300 பதிப்பாளர்கள்,1200 வெவ்வேறு சஞ்சிகைகள், 1700 நிறுவனங்கள் பற்றிய தகவற் தொகுப்பு, 2850 ஆளுமை விபரங்களுடன் கூடிய வரலாற்றுக் கலைக் களஞ்சியம், 250 கட்டுக்களிலிருந்து 50000 க்கும் அதிகமான ஓலைச் சுவடிகளாலான பக்கங்கள் என அவர்கள் ஆவணப்படுத்தியிருக்கின்ற எமது மண் தொடர்பானதும், மக்கள் தொடர்பானதுமான பொக்கிஷங்களின் பட்டியல் நீளுகின்றது.







இவ்வாறானதொரு வசதியும், வாய்ப்பும் 1970களில் எமக்குக் கிட்டியிருந்தால், எரிக்கப்பட்ட யாழ். பொது நூல்நிலையப் பொக்கிஷங்களையும் பாதுகாப்பாக வைத்திருந்திருப்போமே! என அடிக்கடி எண்ணுவதுண்டு. பொதுமக்கள் பங்களிப்பு இல்லாத எந்தவிதப் பொதுக்காரியங்களும் வெற்றியளித்ததாகச் சரித்திரம் இல்லை. எனவே நூலக நிறுவனம் தமிழ் மக்களது சரித்திர, வரலாற்றை மேம்படுத்துவதோடு வீட்டிலிருந்தவாறே ஒரு தேடலை அவர்கள் நடத்தக் கூடியவாறு தமது நடவடிக்கைகளை மேலும் முன்கொண்டு செல்வதற்கான ஒரு நடவடிக்கையைச் செய்யவிருக்கிறது. அதற்கு ஒரு தொடர்புப் பாலமாகவே மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை அவர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளனர். எனவே பொது மக்களாகிய ஒவ்வொருவரினதும் பங்களிப்பானது, தமது நோக்கத்தை நிறைவாக்க உதவும் என அந்தநிறுவனம் பரிபூரணமாக நம்புகிறது. அத்தோடு தமது இலக்கை எட்ட அதுவே சிறந்த வழி என்றும் அவர்கள் எண்ணுகின்றனர். ஆகவே உங்களிடம் உள்ள அரிய பொக்கிஷங்கள் என்று நீங்கள் கருதுவதை உடன் அவர்கள் மூலம் ஆவணப்படுத்துங்கள். அச்சிடப்படக்கூடிய தகமை கொண்ட அனைத்தும் ஆவணப்படுத்தக் கூடிய தகமை கொண்டவையே. அதாவது இதுவரை அச்சிடப்படாத நூல்கள் இருப்பின், அவற்றையும் ஆவணப்படுத்தலாம். நூலகங்களால் சேகரிக்கப்படாத வெளியீடுகளும் உடனடியாக ஆவணப்படுத்தப்பட வேண்டியவையே. “இவை அரியவை. எனவே அவற்றை வெளியே எவரிடமும் கொடுக்கக் கூடாது. தொலைந்துவிடும்” என்று கருதித் தங்கள் வசம் வைத்திருக்கின்றவற்றையும் அவர்கள் தம்மிடமுள்ள மூலத்தை நிறுவனத்திடம் கொடுத்து ஆவணப்படுத்தியபின்னர் அதனை அவர்களிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு கிராமத்தை ஆவணப்படுத்த விரும்புகிறீர்களா? அதற்கான வழிமுறைகளும் அவர்களிடம் உண்டு. அது மட்டுமல்ல பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அளப்பரிய சேவையாற்றிவரும் நிறுவனங்கள் என்பவற்றை ஆவணப்படுத்துகின்றபோது, எமது சமூக வரலாற்றையும் ஆவணப்படுத்துகிறீர்கள் என்பதனை மறக்க வேண்டாம்.

அது மட்டுமல்ல சமூகத்தில் மிகவும் முக்கியமான ஆளுமைகளையும், அவர்களது சுய சரிதத்தையும், அவர்கள் தொடர்பான விபரச் சேகரிப்பின் மூலம் ஆவணப்படுத்தலாம். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுகின்ற வகையில் கடந்தகால மாதிரி வினாத்தாள்கள், குறிப்புகள், ஆசிரிய வழிகாட்டிகள், பாடத்திட்டங்கள், பாட நூல்கள் என்பனவற்றையும் ஆவணப்படுத்த உதவலாம். சமூகத்தில் சமகாலத்தில் அவற்றின் முக்கியம் உணரப்படாத பல விடயங்கள் காலங்கடந்து மிகவும் பெறுமதி மிக்கவையாகப் போற்றப்பட்டமை வரலாறு. அதனாலேயே ஆவணமாக்கல் என்ற விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

எமது சரித்திரம் மற்றும் வரலாற்றுத் தொடர்புடைய பல அனுபவங்களைத் தம்வசம் வைத்திருந்த பலரை நாம் இழந்துவிட்டோம். அவர்களின் அனுபவச் செயற்பாடுகளை நூல்வடிவில் ஆவணப்படுத்த வேண்டிய தொழில்நுட்பம் மட்டுமே எம்மிடம் இருந்ததால் அந்த வசதிகளும், வாய்ப்புகளும் பலருக்கு இயல்பாக இல்லாது போய்விட்டது. ஆனால் தற்போது நூலக நிறுவனத்தில் “வாய்மொழி வரலாறு ” என்ற ஒரு பதிவை அவர்கள் முன்னெடுக்கின்றனர்.

அதன் மூலம் இதுவரை பலரின் அனுபவங்கள் ஒலிவடிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே ஒருவரின் அனுபவங்களையும், அவர் கொண்ட கருத்துகளையும் நூல்வடிவாக வெளிக்கொண்டு வருவதில் சிரமமுள்ள வர்கள், நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு அவற்றை வர்ய் மொழி வரலாறினூடாக ஒலி வடிவத்தில் ஆவணப்படுத்தலாம். அதனை ஒளி, ஒலி வடிவத்திலும் ஆவணப்படுத்தி வருங் காலச் சந்ததியினர் பயன்பெறக் கூடிய வகையில் அவற்றைச் சேமிக்கலாம். ஈழத்துத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பாக அனைத்து அறிவுத் தொகுதிகளையும், மரபுரிமைச் சின்னங்களையும், அவை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆய்வின் அடிப்படையில் ஆவணப்படுத்தி வெளியிடும் நூலக நிறுவனம், உங்கள் ஒவ்வொருவரையும் தமது ஆவணச் செயற்பாடுகளிலும் பங்காளிகளாக இணைந்து கைகோர்த்து முன்செல்ல “வாருங்கள் ஊர் கூடி ஆவணப்படுத்துவோம்” என்ற கோஷத்தோடு அழைக்கின்றது. வெள்ளத்தால், வெந்தணலால் அழிக்க முடியாதவாறு எமது அடையாளங்களை நாம் பாதுகாப்போம். ■



# தேசிய கீதமும்

## சைமன் காசிச் செட்டியின் நினைவும்




தேசிய கீதம் தோன்றுவதற்கு முன்னரே, இலங்கையின் நீளத்தையும் சுற்றளவையும் அளந்து அறிவித்தவர் ஒரு தமிழர் என்ற நினைவை இந்த நாள்களில் பதிவிடவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

'இலங்கையின் அட்ச தேசாந் திரத்தையும், நீள அகலத்தை யும், சுற்றளவையும் முதன் முதலாக ஐரோப்பிய நில அளவையாள நிபுணர்கள் வியக்கும் வகையில் அளந்து கணித்து நிதானமாக அறிவித்த பெரியார் சைமன் காசிச்செட்டி என்னும் தமிழரே.

இன்றைக்கு உடனுக்குடன் வரும் சட்ட மாற்றங்களை அறிக்கைகளை வெளியிடும் அரசாங்க வர்த்தமானி (கசற்) வருவதற்கு முன்னோடி அவரே.

பிரித்தானிய அரசுக்கு முதலே, இலங்கை பற்றிய செய்திகளையும், எல்லாவிதமான தகவல்களையும் திரட்டி 'சிலோன் கசற்றியர்' என்று நூலாய் வெளியிட இவர் விரும்பினார்.

அப்போது இவர் புத்தளத்தில் மாவட்ட முதலியாராகப் பணி புரிந்து கொண்டிருந்தார்.

தமது அவாவை அன்றைய தேசாதிபதி சேர் றொபேட் வில்மட்டுக்கு விண்ணப்பிக்க, அவரும் பாராட்டி இவரை ஊக்குவித்து, குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் அறிவித்தார்.

செட்டியார் தயாரித்த நானாவித செய்தித் தொகுப்பான 'சிலோன் கசற்றியர்' 1834 இல் வெளிவந்தது.

இலங்கைப் பிரதம நீதியரசர் சேர் சார்ள்ஸ் மார்ஷல் பிரபு, பிரதம படைத்தலைவர் சேர் ஜோன் வில்சன் என்போர் அவரைப் பாராட்டி மகிழ்ச்சியுடன் வாழ்த்தி, மதிப்புரையும் வழங்கி 150 பவுண் அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

பின் நாள்களில் வந்த கசற் எனப்படும் வர்த்தமானிக்கு முன்னோடி இதுவேயாகும். செட்டியாரின் புகழ் இலண்டன் வரை பரவியது.

இலங்கை வாழ் தமிழன் இவ்வாறொன்றைப் படைத்தான் என்பது பிரமிப்புக்குரியதாயிற்று'.

தகவல்கள்:
க. சி. குலரத்தினம்
செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்
கட்டுரை (தலையங்கம் நினைவில்லை) பேராசிரியர் கைலாசபதி.

இலங்கையில் எத்தனையோ மாவட்ட முதலிகள் அந்தக்காலத்தில் பணியிலிருந்தும், நில அளவையாளர்களிருந்தும் முழு இலங்கைக்குமான வர்த்தமானி பற்றியும், முழு இலங்கைக்கான நில அளவை வரைபடத்தையும் உருவாக்கியவர் சைமன் காசிச் செட்டி என்ற தமிழரே.

ஒருகாலத்தில், போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் ஒருவர் பின் ஒருவராக ஆண்ட இலங்கைக் கரை நாடுகளின் பரப்பு 10,520 சதுர மைல் என்றும், நடுவில் மலைநாடு எனக் கண்டியரசன் ஆட்சிக்குட்பட்ட நிலம் 14,144 சதுர மைல் என்றும், நவீன அளவைக் கருவிகள் எவையுமின்றி அளந்தறிந்து கூறிய பெருமையும் இலங்கையர் என்று தனை நினைந்து இப்பணியை ஆற்றிய சைமன் காசிச் செட்டி என்ற தமிழருக்குரியதே. சுதந்திர தினத்தன்று தேசிய கீதம் தமிழில் பாடினால், தமிழ் ஈழம் தோன்றிவிடும் என்று சொல்பவர்களுக்கு இந்த வரலாறுகள் தெரியுமோ தெரியாது.

# சமாதான நீதிவான்கள்



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் செ.பிரதாப், யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் முன்னிலையில் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமையன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் பழைய மாணவரும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தில் உளவியல் டிப்ளோமா தாரியுமான இவர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் விஞ்ஞானப் பாடத்துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற பட்டதாரி யுமாவார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஆராய்ச்சி உத்தியோகத்தருமான இவர், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச்சங்க செயலாளருமாவார்.

அதேவேளை நாங்கள் செயற்பாட்டு வலையமைப்பின் தலைமைச் செயற்பாட்டாளருமான இவர், யாழ்ப்பாணம் றோட்டறிக் ஈ கழகத்தின் தலைவருமாவார். இதேவேளை மனித உரிமைச் செயற்பாட்டாளர் மற்றும் சமூக ஆர்வலருமான இவர் கலைஞரும் சிறந்த பேச்சாளருமாவார். அத்துடன் பொது அமைப்புகள் சிலவற்றின் காப்பாளராகவும் இவர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த சரவணபவான் பவானந்தன் ஜனவரி 20ஆம் திகதி அன்று வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம், மானிப்பாய் இந்துக்கல்லூரி , காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், காரைநகர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார்.

காரைநகர் கங்கைமதி சனசமுக நிலையத்தின் பொருளாளர், காரைநகர் வெடியரசன் கலாமன்றத்தின் பொருளாளர் ஆகிய பதவிகளுடன் இவர் பல்வேறு பொது அமைப்புக்களிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளில், பணியாற்றி சேவைகள் பல செய்து வருகின்றார்.



கச்சாய் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தசாமி சுதர்ஸன் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜெகநாதன் கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கொடிகாமம் கச்சாய் மகா விஷ்ணு ஆலய தொண்டர் சபைத்தலைவரும், கச்சாய் வடக்கு விறுமர் சனசமூக நிலையத்தின் உப செயலாளரும், கச்சாய் ஒட்டங்கேணி விநாயகர் ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினரும், அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தால் வடமாகாணத்தில் முதலாவது "சாமஸ்ரீ ஆத்மீக ஜோதி" என்னும் கௌரவ பட்டத்தை பெற்றவரும் ஆவார். அத்து டன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பணிபுரிந்து சமூகத்துக்குச் சேவை செய்து வருகின்றார்.



பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வரும் கோண்டாவிலைச் சேர்ந்த ராஜா பிளாசா குபேந்திரநாதனின் சேவையை நாடறியச் செய்யவும், இலங்கையின் உயர் கௌரவத்தை வழங்கவும் எண்ணி நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் கு.மதுசுதன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் கு.சுரேந்திரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் ஏற்பாட்டினால் இலங்கையின் மீயுயர் சபையாகிய நாடாளுமன்றத்தில் அவரது சேவையை பாராட்டி அங்கீகரித்து சபாநாயகரால் அதியுயர் கௌரவம் வழங்கப்பட்டதோடு, விசேட விருந்து உபசாரமும் அளிக்கப்பட்டது.




# 'மட்டை வேலிக்கு தாவும் மனசு'

சரணியா சண்முகராஜன்
யாழ்.பல்கலைக்கழகம்.

சோதனைகளையும் பசுஞ்சோலைகளையும் பட்ட பெரும் காடுகளையும் தினம் சுகமாய் ரசிப்பது எனது வழக்கமாகும். இத்தகைய வழக்கங்கள் வாசிப்பு எழுத்து என்று இட்டு செல்கின்றன. இதற்கு என் எழுத்தாணி இட்ட கவிதை கட்டுரைகள் மகுடம் பெற்றமை சான்றாகின்றது என் வாசிப்பில் சிக்கிய அநேக கவிதைகள் என் விருப்பத்தோடு என்னை களவாடியிருக்கின்றன. ஈழத்தவர்களின் கவிதைகளில் நீலாவணன், தாமரை தீவான் ,முருகையன்,போன்றவர்களின் கவிதைகள் சில வரிகள் புரியாமல் போனாலும் பல வரிகள் மனதில் மறையாமல் படம் வரையும். படைப்பாளிகள் தன் படைப்பை குழந்தை என்பதும் அதனை வெளியிடுகையில் பிரசவம் என்பதும் வழக்கம் இதனை ஈழத்து இளம் கவி எஸ்.சிவசேகரனுடைய "மட்டை வேலிக்கு தாவும் மனசு" என்ற கவிதை தொகுப்பினூடாக "என் குழந்தைக்கும் ஒரு முகவரியை கொடுப்பது உங்கள் கடமை என்பதை மறந்து விடாதீர்கள்" என்று அழுத்திய வரிகளும் பின் அட்டையில் அவர் விழி வழியும் ஆயிரம் வினாக்களுக்கும் எனது இரசனை தொகுப்பு விடையா கின்றது

பெரும்பாலும் படைப்புகளுக்கு திறமையை தாண்டி அனுபவ முதிர்ச்சியே காரணம் என்பது இவரது "மட்டை வேலிக்கு தாவும்"மனசு நூலின் ஊடாக புலப்படுத்தப்படுகின்றது இந்தக் கவிதை தொகுப்பு புதுக்கவிதை நடையையும் இலகுவான மொழி நடையையும், பேச்சு வழக்கு சொற்களையும் தாங்கி கருப்பொருள் மற்றும் எதுகை மோனைகள் என்னை மறந்து இரசிக்க வைத்தன.

மண் வாசனையையும், தற்கால பிரச்சனைகளையும் தனி மனித வாழ்வின் அம்சங்களான நட்பு,காதல்,பிரிவு,ஏமாற்றம்,சாதிய வேறுபாடு,வறுமை, பழைய நினைவுகள் என்று பல்வேறு உணர்வுகளை பொருத்தமான தலைப்பின் கீழ் ஆழமான வரிகளின் ஊடாக பல்வேறு வலிகளைச் சுமந்து நிற்கின்றது

இதனை

*"ஞானம் தரும் போதி மரங்கள் எல்லாம்*
*தனிமையில் நின்று தள்ளாடியபடி*
*நிழல் கொடுக்கின்றன*
*முதியோர் இல்லங்களில்"*

இன்றைய கால கட்ட விரை ஓட்ட பாதையில் பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்ப்பது நேரத்தின் வறுமையா? அல்லது மனிதாபிமான வரட்சியா? என்பது புரியவில்லை இதனை தன் கவிதைகளில் அழகிய வரிகளில் கூறியுள்ளமை என் இரசனையை கவர்ந்தது.

மேலும் "பிள்ளை வரம்" என்ற தலைப்பின் கீழ் சிவசேகரன் ஒரு தாயாக மாறி பிள்ளை வரம் கேட்கும் மொழி நடையும் கருத்தை சொல்லும் உத்தியும் அற்புதமாக அமைந்துள்ளது இது எழுத்தாளர் தன் படைப்பின் பாத்திரங்களாக நின்று எழுதுவதை புலப்படுத்துகின்றது.

*"இதயத் துடிப்பின்*
*கடைசி நிமிட நிசப்த ஒலி*
*அந்த இடத்தை சுற்றி*
*கேட்டு கொண்டிருக்கிறது..."*

என்ற வரிகள் ஏதோ ஒரு நிசப்த பெரு வெள்ளத்துள் கொண்டு போவதும், அசைவால் உணரும் இதயத்துடிப்பு பெரும் சத்தமாய் கேட்பதும் இறுதியாக என்பதன் ஊடாக ஒரு அச்ச உணர்வு சிந்தையில் நிரப்பப்படுவதும் மரண பயத்தில் நின்று விட வைக்கின்றது இதை விட இந்தக் கவியின் தலைப்பு" அந்த உயிர் போய் கொண்டிருக்கிறது" என்று அமைந்தமை வாசிப்பில் விறு விறுப்பை ஊட்டுகின்றது மேலும் நமது நாட்டில் மௌனமாய் பயணிக்கும் சாதிப் பிரச்சினையை தொட்டதும் படைப்பின் கனதியை கூட்டுகிறது.

*" சாதி சாதி*
*பாழாய் போகாத சாதி*
*சாதியை தூக்கி குப்பையில் வீசு*
*நீ ஏதாவது சாதி "*

என்ற பேர் வழிகளுக்கு ஆழமான கருத்துக்களை எளிமையான மொழி நடையில் உரைத்துள்ளமை சிறப்பு. அடுத்து "எழு நூற்று முப்பது மட்டும்"என்ற கவிதையில் மலையக மக்கள் வாழ்க்கை நிலையும் அவர்களது வறுமை பெரு விழா ஊதியம் ஐநூறில் இருந்து எழு நூற்று ஐம்பதிற்கு உயர்த்தப்பட்ட திருப்தி உணர்வையும் காட்டியுள்ளார். "திண்ணைகளோடு வாழுதல்" என்ற கவிதையில் மனிதனுக்கு நிகழ்ந்தேறும் விதி விலக்கே இல்லாத மரணச்சடங்கை எச்சரிக்கையாய் நினைவூட்டி கவி தொகுப்பை முடிக்கின்றார் மனித வாழ்வின் இறுதியை மறக்காது மரண பயத்தோடு வாழ்வின் தார்ப்பரியத்தை இரசிக்கவும்

*"நாச்செற்று விக்குள்மேல் வாரா முன்*
*நல்வினை மேற்சென்று செய்யப்படும்"*

என்ற குறள் அடியார் வாக்கிற்கு இணங்க இறப்பதற்கு முன்பாக நல் அறங்களை செய்து முடித்து விட வேண்டும் என்பதும் மறை முகமாக தென்படுகின்றது.

ஈழத்து இளம் கவியான சிவசேகரன் அவர்களின் "மட்டை வேலிக்கு தாவும்" கவிதை தொகுப்பானது அட்டைப்படம் முதல் மண் வாசனையை புலப்படுத்தும் தலைப்பும் பல்வேறு தன்மைகளையும் உணர்ச்சிகளையும் பொருத்தமான தலைப்பிட்டு பக்கங்களில் பதிய விட்ட இக்கவிதை தொகுப்பு என் இரசனைக்கு இரையாகி மூளையில் ஆங்காங்கே பதிவாகியது கவிப்புலமையின் சிறப்பை மெச்சி நிற்கின்றது இனி உங்கள் முன் மீண்டும் சுவைத்து ஆசியையும் விருது களையும் பெறக்காத்திருக்கிறது.....

---

நூல் அறிமுகம்

# வாசிப்பின் வாசனை

கு.சரவணன்
புலோலி, வடமராட்சி.

இலக்கிய உலகில் கவிதைக்கென்று தனியிடம் உண்டு. வாசிப்போர் மனதில் சட்டென ஊடுருவி தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தி கவிதைக்கு உண்டு. இதனால்தான் வாசகர்களும் எழுத்தாளர்களும் கவிதையோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றனர். கவிதை ஒரு உறைநிலைப் பண்டம் இல்லை காலத்துக்குக் காலம் வடிவங்களை மாற்றிக் கொள்ளும் இயங்கு நிலைத்தன்மை உடையது. அந்த வகையில் ஈழத்தில் கவிதைப் பாரம்பரியத்துக்கு இலக்கிய உலகில் முக்கிய இடமுண்டு. எண்ணற்ற சிறந்த பல கவிஞர்கள் ஈழத்திலக்கிய உலகில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றனர்.

'மழைக்காலக் குறிப்புகள்' என்னும் கவிதை நூலினைத்தந்து இந்த வரிசையில் இணைந்து கொள்கின்றார் கவிஞர் வேலணையூர் தாஸ். கந்தையா சோதிதாசன் என்னும் பாரம்பரிய தமிழ் மருத்துவர் இலக்கிய உலகில் 'வேலணையூர் தாஸ்' என்கின்ற புனை பெயரில் அறியப்படுகின்றார். கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற வெகுசன அரங்குகளில் நன் கறியப்பட்ட தாஸ், ஓர் இலக்கியப்பித்தர். அத்தோடு இவர் யாழ்.இலக்கியக் குவியம் என்கின்ற அமைப்பின் நிறுவுனரும் ஆவார். வளர்ந்து வருகின்ற இலக்கிய அரும்புகள் தொடக்கம், இலக்கிய உலகில் உச்சம் தொட்டவர்கள் வரை அனைவரையும் ஒன்றாக இணைத்து, இலக்கியக் குவியம் ஊடாக இலக்கியப்பணி புரிபவர்.

யாழ். இலக்கியக் குவிய வெளியீடாக வந்திருக்கும் மழைக்கால குறிப்புக்கள் வேலணையூர் தாஸ் அவர்களுடைய முதலாவது கவிதைத்தொகுதி. ஐம்பத்தைந்து கவிதைகளையும் நான்கு இசைப்பாடல்களையும் கொண்டதாக இத்தொகுப்பு காணப்படுகின்றது. அவரது முதலாவது கவிதைத்தொகுதியாக இது அமைந்திருந்தாலும் கூட , மிக முதிர்ந்த ஒரு கவிஞரது கவிதைகளின் சாயலையும் கவித்துவத்தையும் கொண்டுள்ளது. வாசகர்களுக்கு இலகுவில் புரியும் மொழிநடையோடு, படிமச் சுமைகளற்ற கவிதைகளைப் பிரசவித்துள்ளார்.

ஒரு இலக்கியம் பிறக்கின்ற போது அது, அக்காலத்தின் சூழ்நிலையை பதிவு செய்தல் அவசியம். தன்கால நிலவுகையை கவிதையிலே பாடி மனத்திருப்தி அடைபவன் கவிஞன். ஒரு கவிஞன் மக்கள் பிரதிநிதியாக மக்கள் குரலாக ஒலிப்பான். இதற்கு உதாரணமாக, இந்தத் தொகுதியின் முதற்கவிதையைக் கொள்ளலாம். போரால் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் நிலமிழந்தவர்களின் ஆழ் மனச்சோகத்தை அந்தக் கவிதையில் பதிவு செய்கின்றார்.

*அம்மான் ஆண்ட நிலம்*
*அவன் அப்பன் சொந்தநிலம்*
*சீரணியைக் கைப்பிடிக்க*
*சீதனமாய் தந்த நிலம்*

*...........*

*ஓடி வந்தேன்*
*என் நிலத்தில்*
*உருண்டழுது*
*உயிரை விட*
*ஐயகோ!*
*தென்னை எங்கே*
*தென்றல் எங்கே*
*சுற்றிவர முட்கம்பி*
*இரும்புத் தூண் அரனில்*
*விளங்கா மொழியினிலே*
*பெயர்ப்பலகை*



அதே போல, போர்அரக்கன் தாண்டவமாடிய முள்ளிவாய்க்கால் மண்ணிலே மருத்துவர்களின் பணி மகத்தானது. தமது உயிரையும் பொருட்படுத்தாது அவர்களாற்றிய பணி மகோன்னதமானது. கடவுளானவர்கள் என்ற தலைப்பில் அந்த மருத்துவர்களையும் பாராட்டி பதிவிடுகின்றார்.

*மனிதரை மனிதர் தின்னத்தொடங்கிய நாட்களில்*
*மனிதாபிமானம்*
*செத்து விடாமல்*
*அந்தச் சில மனிதரிடம்*
*ஒட்டியிருந்தது*

*.....................*

துயரம் பரவிய அந்த பாலையில்
கருணை நதியாய் குளிர்ந்தவர்கள்

தாய்மையை பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். தாய்மையின் ஈரத்தையும், அரவணைப்பையும், உயர்வையும் பாராட்டும் மரபு உண்டு. இங்கே கவிஞர் தாயன்பை ஒரு சேலையின் ஊடாக உருவகிக்கின்றார்.


*உனது நினைவுகளைப் போலவே*
*உன் சேலை பற்றிய ஞாபகங்களும்*
*மறக்க முடியாதவை*
*உன்னோடான பாசப் பொழுதுகளை*
*கண்முன் கொண்டுவரும்*
*நான் மழையில் நனைந்து வரும்போது*
*ஓடிவந்து சேலைத் தலைப்பினால்*
*தலை துவட்டி விடுவாய்*
*அந்த சேலையின் வாசம்*
*பாசம் சேர்த்து வரும்*
*குளிர் அன்பு சூடாகி*
*மனம் முழுதும் பரவும்*

*.....................*

*ஆம் சேலைகள் நூலினால்*
*மட்டும் ஆக்கப்படுவதில்லை*
*அன்பினாலும் நெய்யப்படுகின்றன*



இவ்வாறான சிறந்த கவிதைகளை தாங்கியதான வேலணையூர் தாஸின் மழைக்காலக் குறிப்புக்கள் , இலக்கிய ரசிகரிடம் வரவேற்பைப்பெறும் என்பது நிதர்சனம். அதில் எவ்வித ஐயமுமில்லை.



# கல்வியில் தற்கால பிரச்சினைகள்

ஷானுஜா புவனேஸ்வரன்
2ம் வருட சிறப்புக்கற்கை மாணவி
கல்வி பிள்ளை நலத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

கல்வியானாது மனிதனது அடிப்படைத் தேவைகளில் ஒன்றானதைத் தொடர்ந்து சமூகத்தில் அனைவராலும் சேப்படுகின்ற ஓர் விடயமாகக் காணப்படுகின்றது. ஆனாலும் தற்காலக் கல்விமுறைமையிலும், கல்வி நடவடிக்கைகளிலும் பாரிய பிரச்சனைகள் காணப்படுகின்றபோதிலும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்பது கேள்விக்குறியான ஓர் விடயமாகவே காணப்பட்டு வருகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் கல்வி தொடர்பான அபிவிருத்தி நடவக்கைகளும் புதியன புகுத்துதலும் மேற்கொள்ளப்பட்டாலும் சர்வதேசத்தோடு ஒப்பிடுகின்றபோது போட்டியிட முடியாத ஓர் கல்வி முறையாகவே காணப்படுகின்றது.

தற்காலத்தில் இலங்கையைப் பொறுத்தவரை முறைசார்ந்த மற்றும் முறைசாராத இரு சாராரினாலும் கல்வி போதிக்கப்படுவதுடன், முறைசாராத கல்வி நடவடிக்கைகள் முறைசார் கல்வியை விஞ்சிச் செல்கின்ற நிலை தோற்றம் பெற்றுள்ளது. பெரும்பான்மையாக ஏட்டுக்கல்வி முறையே இன்றும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஓர் எல்லைக்குள் தமதுகற்றல்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் விளைவாக மாணவர்கள் மத்தியில் தேடியறியும் தன்மை, கற்பனைவளம், தொழில்நுட்ப ஆற்றல் போன்றவை இன்னமும் வளர்ச்சியடையாமல் காணப் படுகின்றன. எமது கல்வி முறைமையானது ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வி என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டாலும் மூன்று நிலைகளி லுமுள்ள மாணவர்களும் வெவ்வேறு விதமான கல்வியியற்பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

ஒவ்வொரு மாணவனும் தற்காலத்தில் கல்வியை தொடர்வதில் உடல், உள, குடும்ப மற்றும் சமூக ரீதியில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதைக் காட்டிலும் தற்கால கல்வியிலும் கல்விமுறைமைகளிலும் ஏற்படுகின்ற பிரச்சிச்சினைகளை எதிர்கொள்வதே சவால்மிகுந்ததாக காணப்படுகின்றது. எமது கல்விமுறைமையில் ஆரம்பநிலைக்கல்வியிலே பிள்ளகள் பரீட்சைக்கான கல்வியையே கற்க தொடங்குகின்றார்கள். தமது திறன்களை இனங்காணவோ அல்லதுதிறமைகளைவளப்படத்தவோ அவர்கள் வழிநடத்தப் படுவதில்லை. எண்ணறிவு .எழுத்தறிவு வளர்க்கப்படுகின்றது. ஆனால் பிள்ளையின் எதிர்காலத்திற்கு சிறந்தது எது? என்பது தொடர்பான அடிப்படை ஊக்கப்படுத்தல் கூட அங்கு இல்லை. எமது நாட்டை பொறுத்தவரை தரம் 05 புலமைபரிசில் பரீட்சை பெரிதும் பேசப்படுகின்ற .ஓர் விடயமாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பான கொள்கைகள் மேற்கொள்ளபட்டாலும் நடைமுறையில் மாற் றம் என்பது நிகழாததாகவே காணப்படுகின்றது. சிறுவயதிலேயே பிள்ளைக்கு கல்வி என்பது சுமை என்பதையும் கல்வியில் சமத்துவமில்லை என்ப தையும் ஊட்டுகின்ற ஓர் செயற்பாடாகவே இந்தப் பரீட்சை அமைகின்றது.

தொடர்ந்து இடை நிலைக்கல்வி மாணவர்களை எடுத்து நோக்குகின்ற போது அவர்கள் இடைநிலைக்கல்வியைத் தொடர்கின்றபோதே தமது சுய ஆற்றல் மூலமாக தமது திறமைகளை அறிய தொடங்குகின்றார்கள் இவ்வேளையில் திறன்களை வளர்க்கவும் இணைபாட விதான செயற் பாடுகளில் தம்மை வளர்க்க முயலும் போதும் பரீட்சைகளும் போட்டிச்சுழலும் இடையூறாகின்றது. எமது கல்வி முறையானது துறைரீதியாக ஒழுங்கமைக்கப்படாத ஓர் முறைமையைக் கொண்டதாகவே தென்படுகின்றது.

ஏனெனில் தரம் 01 தொடக்கம் சாதாரண தரம்வரை அனைவரும் பொதுவான ஓர் கல்வியைத் தொடர்வதோடு உயர்தரத்தில் இரண்டரை வருடங்கள் மாத்திரம் தமது விசேட துறை யை தேர்ந்தெடுக்கிறார்கள். இதனால் தமது துறைரீதியான அறிவை பாடசாலைக்கல்வி காலத்தில் போதியளவில் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

மேலும் உயர்கல்வியைத் தொடர்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்கோ அல்லது கல்வியற் கல்லூரிகளுக்கோ உள்வாங்கப்படுவதில்லை புள்ளி அடிப்படையில் மாவட்ட ரீதியில் முதன்நிலை பெறும் மாணவர்கள் மாத் திரமே தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஏனையவர்களுடைய உயர்கல்வி சவால் மிகுந்ததாகவே காணப்படுகின்றது. அவ்வாறாயினும் பாடாசாலைக் கல்விக்கும் பல்கலைக்கழக மற்றும் தொழில்நிலைக்கல்விக்கும் இடையே மிகப்பெரிய கால இடைவெளி ஒன்று காணப்படுகின்றது.

உயர்தரப்பரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறு கிடைத்த பின்னர் அண்ணளவாக ஒரு வருடத்திற்கு மேல் தமது பட்டப்படிப்பை தொடர காத்திருக்கிறார்கள். இன்றைய நவீன சுழலில் ஒரு நிமிடம் வீணடிப்ப தையே நாம் வரும்புவதில்லை.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை கற்றல் காத்திருப்புக்காக ஒரு வருடம் வீணடிக்கப்படுகின்றது. மேலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் மாணவர்கள் தேர்ச்சியடைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால் பெரும்பான்மையான பாடசாலைகளில் மும்மொழி அடிப்படையிலான கல்வி நடவடிக்கைகள் இல்லை.

மூன்று பாடங்களும் பாடத்திட்டத்தினுள் கொண்டுவரப்பட்டாலும், மொழியை ஊடகமாக கொண்ட கற் றல் நடவடிக்கைகள் இல்லை.

மாணவர்கள் பாடசாலைக்கல்வியை தமது தாய்மொழிகளில் கற்று தேர்ச்சியடைந்த பின்னர் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் தமது பட்டப்படிப்பை கட்டாயம் ஆங் கிலமொழியில் தொடரவேண்டும் என்ற நிலை ஏற்படுவதனால் கற்றலை சுமூகமாகவும்போதியவிளக்கத்துடனும் பெற்றுக்கொள்வதென்பதுபாரியதொரு பிரச்ச னையாகும்.

இதற்கு பிரதான காரணம் அனைத்துப் பாடசாலைகளிலும்ஆங்கிலமொழியை ஊடகமாக கொண்ட கற்றல் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படாமைஆகும். பொதுவான எமது கற்றல் முறைமையானது எதிர்காலகல்வியோடுபொருத்தப்பாடுடையதாக அமையவில்லை. வரையறுக்கப்பட்ட பாடத்திட்டத்தோடு பரீட்சையை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது. தற்கால தொழிநுட்பத்தோடு ஒன்றித்ததாகவோ அல்லது தொழிற்துறை சார்ந்ததாகவோ இல்லை.

இதன் விளைவாகவே பட்டப்படிப்பின் பின்னரும் வேலை வாய்ப்பு என்பது பலருக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. கல்வியில்ஓர்நிறைவை அடைந்த பின்னரும் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றபோது வாழ்நாளில் அரைப்பகுதி கற்றலுக்காக செலவிடப்பட்டது பிரயோசனமற்ற செயற்பாடகவே எண்ணத் தோன்றுகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் கல்வி கற்கும்முறைமைகள்எமதுகற்பனைக்கு அப்பாற்பட்ட அளவு மாற்றத்தைக் கண்டுள்ளது. திறன்பேசிகள், கணினிகள், மடிக்கணினிகள், இணையம், தொலைத் தொடர்புச் சாதனங்கள், டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட எண்முறையான கற்றல் உபகரணங்கள் போன்ற பல்வேறுபட்ட விதங்களில் வளர்ச்சி கண்டுள்ள சர்வதேச கற்கை முறைமைகளோடு ஒப்பிடுமிடத்து, இலங்கை இன்று இருக்கின்ற நிலை மிகவும் பின்தங் கியே உள்ளது என்பதில் ஐயமில்லை. கல்வி முன்னேற்றத்தை டிஜிட்டல்மயப்படுத்துகின்ற செயல்முறையானது, மூன்று படித்தரங்களைக் கொண்டிருக்கின்றது.

முதலாவது தொலைக்காட்சிகள் போன்ற ஓடியோ வீடியோ கருவிகள் குறைந்த வேக இணைய தொடர்புகள், கணினி விகிதத்திற்கு அதிகமான மாணவர் மற்றும் தேவையான தகவல் தொழில்நுட்ப திறன்களைக் கொண்ட இரண்டு ஆசிரியர்கள் போன்றவற்றையும், இரண்டாவது மல்டிமீடியா புறொஜக்டர்கள், அதிவேக இணையத் தொடர்புகள், கணினி விகிதத் திற்கு குறைந்த மாணவர் போன்ற மிகவும் முன்னேற்றகரமான கருவிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு கொண்ட போதியளவு ஆசிரியர்கள் எனவும் இறுதிப் படித்தரம், ஆசிரியர் முன்னெடுப்பு கல்வி அல்லாது மாணவர் வழி நடாத்தும் கல்வியாகவும் இனங்காணப்படுகிறது.

ஆனால் இலங்கை இன்றும் முதல் படித்தரத்தையே பூரணப்படுத்தவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும் எமது கல்விமுறைமை தொழில் வாய்புக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இருந்தால் கற்றவர்கள் தெருவில் நிற்கவோ அல்லது மூளைசாலிகள் வெளியேற்றம் ஏற்படவோ அல்லது வேற்று நாடுகளிடம் கையேந்தவோ அல்லது எமது நாட்டு வளங்களை நாம் பயன்படுத்தாது வேற்றுநாடுகளிடம் ஒப்பந்தம்அளிக்கவேண்டிய அவசியமே இல்லை.

கல்வியில் உள்ள தற்காலப் பிரச்சனைகளை கருத்திற் கொண்டு எமது நாட்டு வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தும் வகையில் தொழிற் வாய்புக்கு ஈடுகொடுக்க கூடிய வகையிலும் தொழில்நுட்ப அறிவோடும் சர்வதேச கல்வி முறைகளோடு போட்டியிட கூடிய வகையிலும் கல்விமுறைகள்மற்றும்கொள்கைகளைதீர்மானிப்பதனூடாக நிச்சயம் சிறந்த ஓர் நாட்டைக்கட்டியெழுப்ப முடியும்.

# உள்ளியது எல்லாம் உடன் எய்தும்

இசைவாசி




மன ஆற்றல் ஒரு மனிதனுடைய ஆற்றல். உடம்பும் உள்ளமும் இணைந்த கடவுளுக்கு சிவசக்தி என பெயர் வைத்து போற்றி வருகிறோம். அந்த சக்தி என்பதே நம்முடைய மன ஆற்றல் தான்.
நினைத்தது நிறைவேறும் நினைத்தெல்லாம் நிறைவேறாது.
'எப்படி இப்படி பேசுறீங்க அப்படி நானும் பேசனும்னா நான் என்ன செய்யனும். நான் பேச்சாளார் ஆகனும்' என்று மாணவன் ஒருவன் பல கேள்விகளோடு வந்து நின்றான்.
இப்படி நினைக்கும் போதே நீ பேசும் தகுதியைப் பெற்று விட்டாய். உன்னை பேச விடாமல் தடுப்பது உன்னுடைய தயக்கமும் பதட்டமும்தான். அதை விட்டு விட்டு வாய்ப்பு வரும் போதெல்லாம் பேச ஆயத்தமாக இரு என்ற சின்ன அனுபவத்தை சொன்னேன்.
நாம் நினைப்பது நடக்க வேண்டும் என்றால் அதைப் பற்றியே சிந்தனை செய்து அதை நடைமுறை படுத்தினால் நிறைவேறும் என்பதே உண்மை. யோசித்து கொண்டே இருப்பவன் ஜெயிப்பதில்லை. அதை செயல்படுத்துபவனே ஜெயிக்கிறான். விதை விழுந்தால் தானே விருட்சமாகும். அதுபோலவே நினைத்தால் மட்டுமே வெற்றிகள் நிறைவேறும்.
ஜெயிப்பவர்களும் வளமான வாழ்வை பெற்றவர்களும் உள்ளத்தில் இப்படி வாழ வேண்டும் என்று நினைப்பவர்களாக தான் வாழ்ந்திருப்பார்கள். அதனால் தான் ஒரு அறிஞன் உங்களைப் பற்றிய கற்பனைகளே உங்கள் வாழ்வை தீர்மானிக்கிறது என்றான்.
முதலில் நினையுங்கள். எல்லாம் நிறைவேறும்.
நடந்தவைகள் பற்றிய முன் கோபம் இல்லாமல் மன உறுதியால் நினைக்கப்படுதல் நடக்கும். காத்திருங்கள்.
"உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்"




# கொரோனா

வேலணையூர்தாஸ்

ஓசோன் பெரு வெடிப்பின் இடை
கசிந்த கதிர் வீச்சில் கருகி எரிகிறது காடு.
பச்சை தொட்டில் என கிடந்த
வன விலங்கு வெந்து தணலாகி வெடித்துகிடக்கிறது.

வெக்கை மணமள்ளி மேனி வியர்க்கிறது காற்று.
அமில நெடி கலந்து நீலம் கறுப்பாகி
நிதம்பி தகிக்கிறது கடல் நீருக்குள் சுவாசம் திணறி
கரை குதித்து செத்து கிடக்கிறது மீன்.

மிசின் வெட்டி அகழ்ந்து மண் இழந்து கிடங்காகி
மார் திறந்து கிடக்கிறது நிலம்.

வானம் இடிந்திருக்க நிலம் மண்ணை
இழந்திருக்க கடல் செத்து மடிந்திருக்க

மனிதன் சுய நலத்தின் சுக களிப்பில் சுகித்திருக்க......
அதிர்ந்து சபித்தது தெய்வம்.

கொரோனா கொன்று வர " எழுந்தது காண்..







கடந்த 28.01.2020 அன்று காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற நாடக விழாவில் ஆரோகணா அரங்கக் கல்லூரியின் "வண்டிப் பயணம்" நாடகமும் ஸ்ரீலேகா பேரின்பகுமார் அவர்களின் எழுத்துருவில் சத்தியசீலன் அவர்க ளுடைய நெறியாள்கையில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் சிமாகாவின் "கனிந்த இரவுகள்" "நாடகமும், கணேசராஜா" அவர்களுடைய எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் "பச்சை மரமும் படும் நாடக மும்" ஆற்றுகை செய்யப்பட்டன.





## கிளிநொச்சி மாவட்ட இளம் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட "உறையாத குருதி" எனும் குறுந்திரைப்படம் மற்றும் "எதிர்பார்த்த விழிகள்"




எனும் காணொளி பாடல் வெளியீட்டு நிகழ்வு 29.02.2020 அன்று சனிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

**குறும்பட இயக்குனர்**

A.J. T தர்சன் இயக்கத்தில் உருவான இரண்டு படைப்புக்களும் யாழ் அச்சுநகர், குருசுமுத்து ஜோ. அன்ரனி கல்வி அபிவிருத்தி அறக்கட்டளையின் நிதி அனுசரனையில் மித்திரசேனை குழுமத்தினரால் வெளியிடப்படவுள்ளது.
இவ் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அருட்தந்தையர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், சமூகம்சார் வலுவூட்டல் நிறுவன பிரதிநிதிகள், மூத்த கலைஞர்கள், படைப்பாளிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பங்குபற்ற உள்ளார்கள்.
போதைப்பொருள் பாவனையின் விபரீதங்கள், அதனால் ஏற்படும் தனிப்பட்ட மற்றும் சமூக பாதிப்புகளை மையமாக வைத்து எமது பிரதேச இளம் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட இவ் படைப்புக்களை ஊக்கப்படுத்திக் கௌரவப்படுத்த தங்களையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

**நன்றி: மித்திரசேனை குழுமம்.**




சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியம் பெருமையுடன் வழங்கும் "கலையாழி " எனும் கலைகளின் மாபெரும் திருவிழா இன்றும் (19), நாளையும் (20) இரு தினங்களிலும் சுவாமி விபுலானந்தா உள்ளக இராசதுரை அரங்கிலும் வெளி வளாகத்திலும் காலை 8மணி தொடக்கம் இரவு 9மணி வரை வெகு விமர்சையாக நடைபெற உள்ளது.





## இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தினரின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை காணப்படும். அவசர தேவைகளுக்கு கடன் பெறுவீர்கள்.

**இடபம்:** திறமையை வளர்த்துக் கொள்வதால் பல நன்மை பெறலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். குடும்ப தேவைகளுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனசாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் அனைத்தும் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சி புதிய இலக்கை எட்டும்.

**கடகம்:** மனதில் பலநாள் இருந்த சஞ்சலம் தீரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். ஆதாய பணவரவில் சேமிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர்.

**சிம்மம்:** எதிர்மறையான சூழல்களில் விலகுவதால் நன்மை பெறலாம். தொழில், வியாபார வளர்ச்சி சீரான முன்னேற்றம் பெறும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**கன்னி:** செயல்களில் பாதுகாப்பை பின்பற்றினால் மிகுந்த நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். பண வரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள்.

**துலாம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகி வளர்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** அளவான பேச்சால் சுயகௌரவத்தைப் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிச் சுமை அதிக ரிக்கும். முக்கிய செலவுகளுக்கு பண வரவு கிடைக்கும்.

**தனுசு:** உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம் கொள்வீர். இஷ்ட தெய்வ அருளால் தொழிலில் உற்பத்தி, வியாபாரம் செழிக்கும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** குடும்பத்தினரின் ஆலோசனையால் நல்வழியில் நடப்பீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி அடைய கூடுதல் கவனம் தேவை. பணவரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள்.

**கும்பம்:** திறமையை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியை செய்வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

# "கொரோனா" சந்தேகம்: விரட்டிப் பிடிக்கிறது சீனா




கொழும்பு, பெப்.19
கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளாகியுள்ள வுகான் நகரின் வீடுகளை சோதனையிடும் அதிகாரிகள் வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என சந்தேகிக்கப்படுபவர்களை சுற்றி வளைத்து பிடிப்ப தற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என சீனாவின் அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வைரஸ் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் எவரும் கட்டாய மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என தெரிவித்துள்ள சீன அரச ஊடகம் பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தார் என கருதப்படுபவரும் தனிமைப்படுத்தப்படுவார் எனத் தெரிவித்துள்ளது. நகரின் எட்டு பிரதேசங்களில் 10 தற்காலிக தடுப்பு நிலையங்களை அதிகாரிகள் உருவாக்கவுள்ளனர் என வுகானின் சுட்டியான் நாளேடு தெரிவித்துள்ளது. சிறிதளவு அறிகுறி உள்ளவர்கள் கூட இந்த தடுப்பு நிலையங்களில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்படுவார்கள் என்றும் சுட்டியான் தெரிவித்துள்ளது.

தொழிற்சாலைகளில் உள்ள கட்டடங்கள், கைத்தொழில் பேட்டைகள், போக்குவரத்து நிலையங்கள் போன்றவைத் தற்காலிக தடுப்பு நிலையங்களாக மாற்றப்படுகின்றன. அதேவேளை வுகனின் அனைத்து சமூகங்களும் கிராமங்களும் அதிகாரிகளின் 24 மணிநேர கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்மூலம் அந்த சமூகங்கள் கிராமங்களின் வெளி உலக தொடர்பு முற்றாக துண்டிக்கப்படும்.

நேற்று முதல் இருமல் மருத்தைக் கொள்வளவு செய்பவர்கள் அல்லது மருத்துவ சிகிச்சை பெறுபவர்கள் தங்கள் அடையாள அட்டையைப் பெறவேண்டும் என்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட வுகானின் பிரபல மருத்துவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். வுகான் வுச்சாங் மருத்துவமனையைச் சேர்ந்த லியு ஜிம்மிங் என்ற மருத்துவரே நேற்று உயிரிழந்துள்ளார். (எ)

# சூடானுடன் உறவுகளை புதுப்பிக்கும் இஸ்ரேல்!

கொழும்பு, பெப்.19
சூடானின் முக்கிய தலைவர் அப்தெல் ஃபதாக் அல் புர்ஹானை, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சந்தித்துப் பேசியமையைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கிடையில் துவண்டு போயிருந்த உறவு புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது.

இதன் ஒரு முன்னேற்ற கட்டமாக, சூடான் வான் பரப்பில் தங்கள் நாட்டு விமானம் முதன்முறையாக பறந்ததாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

சூடான் மற்றும் இஸ்லாமியர்களை அதிகம் கொண்ட நாடுகளில் இஸ்ரேல் அரசு இணக்கமுடன் செயல்பட்டு வருவதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளதாக பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சூடான் வான் எல்லையை இஸ்ரேலிய விமானம் முதன்முறையாக கடந்து சென்றது. இது ஒரு நல்ல முன்னேற்றம்.

இஸ்ரேலின் வெளியுறவுக் கொள்கை என்ற பனிப்பாறையில் இது ஒரு முனை மட்டுமே. அதாவது 10 சதவீதம் மட்டுமே வெளியே கண்களுக்கு புலப்படுவதாக உள்ளது. வரும் நாள்களில் பெரிய அளவிலான மாற்றங்களைக் காணலாம் - என்றார்.

சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீரின் ஆட்சிக் காலத்தின்போது அல் கொய்தா பயங்கரவாதிகளுக்கு ஆதரவளித்ததையடுத்து சூடானுடன் இஸ்ரேல் மறைமுகப் போரில் ஈடுபட்டு வந்தது.

சூடானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்ததையடுத்து அந்த நாட்டு இராணுவம் கடந்த ஏப்ரலில் பஷீரை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கியது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு சூடானின் முக்கிய தலைவர் அப்தெல் ஃபதாக் அல் புர்ஹானை நெதன்யாகு சந்தித்துப் பேசியமையையடுத்து. இரு நாடுகளுக்கும் இடையில் நல்ல உறவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# சிரியாவில் குண்டுவெடிப்பு

## *6 பேர் சாவு; பலர் படுகாயம்*

நியூயோர்க், பெப்.19
சிரியாவில் துருக்கியின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் பொதுமக்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த பலர் அருகிலுள்ள உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிரியாவின் வடக்கு பகுதியில் துருக்கி ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள டெல் அபியாத் நகரில் குடியிருப்புகள் நிறைந்த பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. குர்து இன போராளிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று துருக்கி ராணுவம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. துருக்கி இராணுவம் சிரியா எல்லைக்குள் நுழைந்து குர்து போராளிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே குர்து போராளிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.



## பொறுப்புக்...

இலங்கையின் இரண்டு ஜனாதிபதிகளின் நன்மதிப்பைப் பெற்ற இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு இன்னொரு நாடு பயணத்தடை விதிக்கிறது என்றால், அது இலங்கை நாட்டுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்றே கருத வேண்டியுள்ளது என்றும் அவர் நேற்றுச் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சவேந்திர சில்வா மக்களால் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டவர் என்பதுடன் அவர் தற்போதைய ஜனாதிபதியால் இராணுவப் பிரதானியாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளார்.

### சர்வதேச நடவடிக்கைக்கான முன்னெச்சரிக்கை

தவிர, ஒரு நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பான ஒரு படைத்தளபதி மீது இன்னொரு நாடு பயணத்தடை விதிக்கிறதென்றால் அதுவும் சம்பந்தப்பட்ட நாட்டுக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானமென்றே கருதப்படுகிறது.

இலங்கை அரசு சர்வதேச நியமங்களை அலட்சியப்படுத்தி வருமானால் சர்வதேசம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளுக்கு இது ஒரு முன்னறிவித்தலென்றே நாம் கருதுகிறோம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது சவேந்திர சில்வாவைக் கட்டளைத் தளபதியாகக் கொண்டிருந்த 58ஆவது படைப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள சவேந்திர சில்வா மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தீவிரமானவையெனவும், நம்பகத்தன்மை வாய்ந்தவையெனவும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோரைப் பொறுப்புக் கூறவைக்கவும், பாதுகாப்புத் துறையை சீர்திருத்தவும், நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர அதன் பிறகடமைகளை ஆதரிக்கவும் இலங்கை அரசைக் கேட்டுக்கொள்வதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கை அரசு சவேந்திர சில்வா மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையெனவும், ஒரு தலைப்பட்சமானவையெனவும் தெரிவித்து சவேந்திர சில்வா மீதான பயணத்தடையை நீக்கும்படி கோரியுள்ளது. மேலும் வெளிவிவகார அமைச்சு அமெரிக்கத் தூதுவரை அழைத்து மேற்படி தடை தொடர்பாகத் தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக 2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில், மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசு சர்வதேச வழக்குரைஞர்கள், நீதியாளர்கள் துணையுடன் மேற்கொள்ள வேண்டுமென்றும் அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இப்போது நம்பத்தகுந்ததும், தீவிரமானதுமான ஆதாரங்களின் அடிப்படையிலேயே சவேந்திர சில்வாவுக்கும் அவரின் குடும்பத்துக்கும் பயணத்தடை விதிக்கப்பட்டதாக அமெரிக்கா கூறுகிறது. அதே சவேந்திர சில்வா மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையென்று இலங்கை கூறுகிறது. இரு கருத்துகளும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமானவை.

2015இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மேற்படி போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது மேற்கொள்ளப்படாத நிலையில் இலங்கை அரசுக்கு இரண்டு தடவைகள் கால அவகாசம் வழங்கப்பட்டது. எனினும், தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஐந்து வருடங்களாகிவிட்டபோதிலும் அது தொடர்பான விடயங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வகையில் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவில்லை. அதைவிட இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, ஐந்து வருடங்களின் பின்பு நிராகரிப்பதாகத் தெரிவித்திருந்தது.

### விசாரணை நடத்தியிருந்தால் தப்பியிருக்கலாம்

ஒருதரப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் அது விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலமே குற்றச்சாட்டுக்கள் உண்மையா பொய்யா என்பதைக் கண்டறியமுடியும். மேற்படி விசாரணைகள் நடத்தப்பட்டு சவேந்திர சில்வா மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் ஆதாரமற்றவை என்பது நிரூபிக்கப்பட்டிருந்தால், அமெரிக்கா பயணத் தடை விதிப்பதற்கான வாய்ப்புகள் உருவாகியிருக்கமுடியாது.

ஆனால் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை, சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தமிழ் அரசியல் தலைமைகள் என பல்வேறு தரப்பினரும் விசாரணைகள் மேற்கொள்ளும்படி கோரியும் அது நடத்தப்படவில்லை.

### உண்மை வெளிப்பட்டுவிடும் என்றே விசாரணையில்லை

இந்த விசாரணைகளை இலங்கை அரசு நடத்தாமல் தட்டிக்கழித்து வந்தமையும், தற்சமயம் ஐ.நா. தீர்மானத்தையே நிராகரிப்பதாக அறிவித்திருப்பதற்குமான காரணம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் அரச படையினரின் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் நிரூபிக்கப்பட்டுவிடுமென்ற அச்சம் என்றே நாம் கருதுகிறோம்.

வெளிவிவகார அமைச்சு, சவேந்திர சில்வா மீதான குற்றச்சாட்டு களுக்கு ஆதாரம் இல்லையெனத் தெரிவிக்கிறது. அமெரிக்காவோ நம்பத்தகுந்த, தீவிரமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று கூறுகிறது. எப்படியிருப்பினும் ஒரு விசாரணையை மேற்கொண்டிருந்தால் அமெரிக்காவால் முன்வைக்கப்படக் கூடிய ஆதாரங்களை முறியடித்திருக்க முடியும். எனவேதான் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் சர்வதேச அரங்கில் நிரூபிக்கப்பட்டுவிடுமென்ற அச்சத்தினாலேயே விசாரணைகள் நடத்தப்படுவது தட்டிக்கழிக்கப்பட்டு வந்ததென்பதை நாம் திடமாக நம்புகிறோம். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே இலங்கையால் அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானத்தை நிராகரித்திருப்பதும் இந்த விடயங்களை மேலும் ஆதாரப்படுத்துகிறது- என்றார். (து)

## ஜெனிவாவை...

னன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளது" என்று குற்றம்சாட்டியுள்ளார், அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் மற்றும் தொடர்பாடல் இராஜாங்க அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன.

ஊடக அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழிக்க இலங்கை அரசு முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பெரும் பங்களிப்பு வழங்கினார்.

அமெரிக்க அரசின் செயற்பாடுகள் ஒரு தலைபட்சமானவை. எனவே இராணுவத் தளபதிக்கான பயணத்தடை தீர்மானத்தை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று அரசு வலியுறுத்துகின்றது.

இந்த நெருக்கடி நிலைமையை அரசு இராஜதந்திர மட்டத்தில் வெற்றிகொள்ளும் என்றும் கூறுகின்றோம் என்று தெரிவித்தார்.

### சம்பந்தனின் பேச்சு வெறுக்கத்தக்கது

இதேவேளை, இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துக்கள் முற்றிலும் வெறுக்கத்தக்கவை. என்றும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அமெரிக்கா தன் நாட்டுக்குள் நுழைய இலங்கையின் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் கடந்த வாரம் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-22)

## சனத்...

டைந்து செல்வதாக மாவட்டச் செயலக தகவல்களிலிருந்து தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டு 110 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 366 பேரும், 2 ஆயிரத்து 326 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 369 பேரும், தமிழர்கள் ஒரு லட்சத்து 92 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 14 ஆயிரத்து 444 பேரும் வசித்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டு 106 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 358 பேரும், ஆயிரத்து 236 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 919 பேரும், தமிழர்கள் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 711 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 10 ஆயிரத்து 216 பேரும் வசித்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு 101 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 335 பேரும், ஆயிரத்து 239 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 878 பேரும், தமிழர்கள் ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 793 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 11 ஆயிரத்து 249 பேரும் வசித்துள்ளனர். (ஒ.5)

## கொட்டன்களுடன்...

நேற்று மாலை சங்கானைப் பகுதியில் 6 கொட்டன்களில் சைக்கிள் பிறிவிலை பொருத்திய படி தாக்குதல் சம்பவம் ஒன்றுக்கு தயாரான நிலையில் நின்ற மூவரைத் தாம் கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை கைது செய்யப்படும் போது குறித்த மூவரிடமும் கிராம் கணக்கில் கஞ்சாப் பைக்கற்றுக்கள் உடமையில் இருந்ததாகவும் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த அவர்களை இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-26)

## மயங்கி...

மீசாலை கிழக்கில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பு செல்வரத்தினம் (வயது - 83) என்பவரே உயிரிழந்தார். இவர் இருதய நோயாளி என்றும் தெரிவிக்கப்பட்டது.

மயங்கிய அவரை வாகனத்தில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் அதற்கு முன்னரே சாவடைந்தமை பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இது குறித்த விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-9,131)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 887
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,915,585/-
வெற்றி இலக்கங்கள்
25 47 56 59 O
அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1129
சீட்டிழுப்பு திகதி 2020.02.17 திங்கட்கிழமை
Y 16 64 72 77
3 2 4 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,469,540/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1648
சீட்டிழுப்பு திகதி 18.02.2020
வெற்றி இலக்கங்கள்
46 50 53 66 F
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.46, 819, 076 /=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 18.02.2020
வெற்றி வாரம் 2773
வர்ணம் சிவப்பு
மேடம்
வெற்றி இலக்கங்கள் 17 25 31 33
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.754,064/=

டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 8826
ரூ.100 பரிசுக்காக 846
19.02.2020ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

# ராஜபக்ச கூட்டணியில் தவிசாளர் மைத்திரியா?

## ஐ.தே.க. எம்.பி. விசனம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய பிரதான நபரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, புதிதாக உருவாக்கப்படவுள்ள 'ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணி'யின் தவிசாளராக எந்த அடிப்படையில் நியமிக்க முடியும்? இந்த நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ராஜபக்ச அணியின் இந்தச் செயற்பாடு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நம்பிக்கையைச் சிதைத்துள்ளது.

இவ்வாறு விசனம் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில்விசாரணைகளைமுன்னெடுப்பதற்கு ஜனாதிபதிகோத்தாபயராஜபக்சஆணைக் குழுவொன்றை நியமித்தபோது நன்றி தெரிவித்திருந்தேன், ஆனால், அதனைத் தற்போது மீளப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். நாட்டு மக்கள் அனைவருமே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தனர். இதன் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் கோத்தாபயவை வெற்றியடையச் செய்திருந்தனர்.

ஆட்சிக்கு வந்த உடனே தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி கோத்தாபய நியமித்திருந்தாலும், அந்தக் குழுவால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் மக்கள் தற்போது நம்பிக்கை இழந்துள்ளனர்.

இவர்களின் கூட்டணியின் தவிசாளராக மைத்திரியை அறிவித்ததை அடுத்து இந்த விவகாரம் தொடர்பில் இருந்த குறைந்தபட்ச நம்பிக்கையும் இல்லாமல் போயுள்ளது. - என்றார். (த-22)

---

### தமிழரின்...

டத்தக்கது. அவர் எடுத்துள்ள நிலைப்பாடு மிகவும் ஆக்கபூர்வமானது. அதே வேளை, தமிழ் மக்களின் கோரிக்கைகளும் நியாயமானவை."

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வந்துள்ள பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் மல்க்கம் ப்ருஸ்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நாடாளுமன்றத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சந்திப்பில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரின் வருகை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த இரா. சம்பந்தன், சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

"தமிழ் மக்களின் பூர்விக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அரச அனுசரணையுடன் சட்டவிரோதக் குடியேற்றங்கள் தமிழ் மக்களின் பிரதேசங்களில் இடம்பெறும் வரையில் தமிழ் மக்கள் தனி நாடு கோரிக்கையை முன்வைக்கவில்லை.

அதேவேளை, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்னர் தனிநாட்டுக் கொள்கையை தமிழ் மக்கள் கைவிட்டனர்.

13ஆவது திருத்தச் சட்டம் ஒரு முன்னேற்றகரமான ஒரு படியாக இருந்தாலும் ஆக்கபூர்வமான அதிகாரப் பரவலாக்கத்துக்கு அது போதுமானதாக இருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகள் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் தாண்டிய ஒரு அதிகாரப் பரவலாக்கத்துக்கு அடிகோலும் வகையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தன.

பல வரைபுகள் முன்வைக்கப்பட்டாலும் இன்றுவரை ஒரு தீர்வை நாம் கண்டுகொள்ளவில்லை.

வடக்கு, கிழக்கில் மாத்திரமல்ல முழு நாடும் செழிப்படைய வேண்டும் என்பதே எமது விருப்பம். அதிகாரப் பரவலாக்கமானது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. மாறாக அது அனைத்துப் பிரதேசங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படும் ஒன்று.

மக்கள் தமது கருமங்களைச் செய்து கொள்ளும் வகையில் அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு தீர்வையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என்று இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாங்கள் தவறான ஒன்றையோ அல்லது அநீதியான ஒன்றையோ கோரவில்லை. எமது கோரிக்கையானது நியாயமானது என்று இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

சந்திப்பில் இரா.சம்பந்தனுடன் கலந்துகொண்ட கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கும்போது, பேரினவாத ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமேயானால் அதிகாரப் பரவலாக்கம் மாத்திரமே ஒரே வழி" என்றார்.

"அதிகாரப் பரவலாக்கமானது தமிழ் மக்களின் பிரச்சினைகளை மாத்திரமன்றி ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண வழிவகுக்கும். இந்த அரசும் புதிய அரசமைப்பு வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் கண்டுகொள்ளும் வகையில் அந்தப் புதிய அரசமைப்பு அமைய வேண்டும்." என்று சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

**மல்க்கம் ப்ருஸ்**

சந்திப்பின் இறுதியில் கருத்துத் தெரிவித்த மல்க்கம் ப்ருஸ், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இரா.சம்பந்தனின் பங்களிப்பைப் பாராட்டினார். அதே வேளை, சம்பந்தன் எடுத்துள்ள நிலைப்பாடு மிகவும் ஆக்கபூர்வமானது, தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானது என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தனின் தெளிவான நியாயமான அமைதியான நடைமுறைகள் மெச்சத்தக்கது எனவும், தொடர்ந்தும் ஒரு நியாயமான தீர்வை அடையும் நோக்கில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட பிரிட்டன் தயாராக உள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். (த-22)

### மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 08 . 1934



இறப்பு
15 . 02 . 2020

**வீரவாகு மயில்வாகனம்**
**(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர் SBO)**

யாழ்ப்பாணம் புங்கங்குளம் வீதியை பிறப்பிடமாகவும், கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு மயில்வாகனம் கடந்த (15.02.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - சிவகாமி (பாக்கியம்) தம்பதிகளின் மருமகனும், அன்னரெட்னத்தின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ஜேர்மனி), கீதா (நோர்வே), சகீலா (நோர்வே), யதுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரி (ஜேர்மனி), சுரேஷ் (நோர்வே), ரமேஷ் (நோர்வே), விஜயகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (நடராசா), சரஸ்வதி, பாக்கியம், மகாலிங்கம் மற்றும் ஜயாத்துரை (கருணானந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தர்மராசா மற்றும் செல்வராசா (லண்டன்), தவராசா ஆகியோரின் மைத்துனரும் சுகிர்தா(லண்டன்), காலஞ்சென்ற அன்ரனிற்றா(பவளம்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் தேனுகன், கீர்த்திகன், கார்த்திகன், சங்கீதன், சாகித்தியன்(ஜேர்மனி), விதுஷன், மிதுனா, மிதுலன், வர்ணன், மஞ்சுதன், கல்கிதன்(நோர்வே), திரஷ்வி, பிரகவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (20-02-2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் துண்டி இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25, கச்சேரி ஒழுங்கை,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:- அன்னரெத்தினம் - மனைவி - +942 1222 5775

### உயிர்த்த...

நேற்றுமாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னரான ஒவ்வொரு விடயங்களையும் அறிந்துகொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு எனச் சுட்டிக்காட்டிய கொழும்பு பேராயர், அந்த உரிமையைத் தலைவர்கள் நிலைநாட்டுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் பதிவாகியுள்ள விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன என்று தமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழு தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைந்தாலும், பாதுகாப்புத் தரப்பினர் இது தொடர்பில் உரிய முறையில் செயற்படுகின்றனரா என்பதை அறியமுடியவில்லை என்று ஆண்டகை மேலும் தெரிவித்தார்.

கடந்த அரசிலும் இந்தத் தாக்குதல் விசாரணைகள் திருப்தியில்லை என்று அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-22)

### கிணற்றுக்குள்...

டுள்ளது.

புங்குடுதீவு மத்தி முதலாம் வட்டாரம் ஜே/28 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பாவனையில்லாத கிணற்றில் ஆண் ஒருவரின் சடலம் குப்புறக் கவிழ்ந்த நிலையில் காணப்படுவதாக கிராம மக்களால் கிராம அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் பொலிஸாருக்கு அறிவித்தார். இதனையடுத்துப் ஊர்காவற்றுறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளில் ஈடுபட்டனர்.

சடலமாகக் காணப்படுபவர் உயிரிழந்து, 3 நாள்களுக்கு மேல் ஆகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் இடம்பெறும் வீட்டுத்திட்டத்துக்குப் பொறுப்பான தேசிய 'வீடமைப்பு அதிகாரசபையின் தொழிநுட்ப அலுவலரை கடந்த 4 நாட்களாகக் காணவில்லை என்று சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக் கது. சடலம் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிணற்றிலிருந்து மீட்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-26 -105)

### பருத்தித்...

நீதிமன்ற அனுமதியுடன் இன்று அந்தப் பகுதியில் ஆராய்வு நடத்தி குண்டுகள் மீட்கப்பட்டுச் செயலிழக்கவைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-173,26)

# பரிசளிப்பு நிகழ்வு

மஹா சிவராத்திரியை முன்னிட்டு சிவராத்திரி மட பரிபாலன சபையினரால் வடக்கு மாகாணத்தில் உள்ள பன்னிரெண்டு கல்விவலயங்களில்நான்குபிரிவுகளில் நடத்தப்பட்டபண்ணிசைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வானது எதிர்வரும் 21ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருக்கேதீச்சரம் மஹா சிவராத்திரி மடத்தில்மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற உள்ளது. (ந-213)

## VACANCY ANNOUCEMENT

The HALO Trust is a non-political and non-religious registered British charity which removes land mines and other explosive remnants of war. HALO work in 25 countries and territories globally and has worked in SriLanka since 2002 with offices in Kilinochchi and Jaffna.

THE HALO TRUST

HALO is seeking hard working candidates for an Interpreter vacancy. **All applications must be submitted no later than Tuesday 25th February 2020.** Only successful candidates will be contacted. For further information on any of this role advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply, particularly female candidates for this role.

Interested candidates should submit their bio-data, contact details, CV, and a brief summary of their experience **(in English)** to: vanni@halosrilanka.org or to The HALO Trust, 450 Thirunagar West Road, Kilinochchi.

**INTERPRETER**

The Interpreter will provide verbal and written translation, particularly in support to HALO Sri Lanka's international staff both in the field and in the office. Duties will include, providing verbal translation during meetings, minefield visits and events, and providing written/typed translation of documents.

**Essential:** fluency in English, Tamil and Sinhala both verbal and written, valid driving license, IT literate. Desirable: previous NGO experience.

**Salary will be paid LKR 54.800.00.**

THE HALO TRUST

## VACANCY ANNOUCEMENTS

The HALO Trust is a non-political and non-religious registered British charity which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and terri tories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Kilinochchi and Jaffna.

HALO is seeking hard working candidates for a variety of vacancies as listed below. **All applications must be submitted no later than Tuesday 25th February 2020.** Only success ful candidates will be contacted. For further information on any of the roles advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply, particularly female candidates for all roles.

Interested candidates should submit their bio-data, contact details, CV, and a brief summary of their experience **(in English)** to: **vanni@halosrilanka.org** or to The HALO Trust, 450 Thirunagar West Road, Kilinochchi.

**1.LOGISTICIAN**

Based at HALO's Kilinochchi office, the Logistician will provide support to the Logistics and IT Manager, the Fleet Administrator, and the Data Entry Officer. This will involve entering data into the logistics database, ensuring forms are completed and filed correctly, maintaining files for item tracking, and other duties as required in support of the Logistics and Fleet depar ments.

**Essential:** good command of English, excellent working knowledge of Microsoft Office (especially Excel).

**Desirable**: previous data entry and database experience.

**2.DATA ENTRY OFFICER**

Based at HALO's Kilinochchi office, the Data Entry Officer will provide support to the Office Manager and HR staff in order to ensure effective and efficient administrative and clerical services. This will involve maintaining personnel files, completing paperwork on behalf of operational and support staff, maintaining attendance records, EPF and ETF related works and other duties in support of the HR and Administration departments.

**Essential:** fluency in English, excellent working knowledge of Microsoft Office (especially Excel).

**Desirable:** previous HR and admin experience.

**3.SPARE PARTS ASSISTANT STOREMAN**

Based at HALO's Kilinochchi office, the Spare Parts Assistant Storeman will provide support to the Senior Storeman and Spare Parts Storeman to ensure that workshop and oper ational staff have the spare parts, lubricants and fuel required to carry out their duties. This will involve maintaining stores, issuing spare parts, recording write-offs, preparing job sheets, updating the store log sheets, and other duties in support of the Logistics Department.

**Essential:** working knowledge of mechanical/vehicle parts.

**Desirable** : working knowledge of English.

# வெற்றிலையில்...

செயலாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: பொதுத்தேர்தலில் கூட்டணியாக மொட்டு சின்னத்திலேயே போட்டியிடுவோம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தொடர்ந்தும் இயங்கும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. ஆயினும் அதுகுறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

**மனித உரிமைகளை**
**மீறியது அமெரிக்காவே!**

இராணுவத் தளபதியின் குடும்பத்தினருக்குப் பயணத்தடை விதித்ததன் மூலமாக அமெரிக்காவே மனித உரிமையை மீறியுள்ளது. மனித உரிமை மீறல் தொடர்பில் அமெரிக்கா தவறான முடிவு எடுத்துள்ளது.

உரிய ஆதாரங்களின்றி, சாட்சியங்களின்றி ஜஸ்மீன் சூக்கா தயாரித்த ஏற்றுக்கொள்ள முடியாத அறிக்கையை அடிப்படையாகக்கொண்டே இராணுவத் தளபதிக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ளது.

மனித உரிமைக் காவலன் என்ற நினைப்பில் செயற்படும் அமெரிக்கா இன்று என்ன செய்துள்ளது? எந்தவித ஆதாரமும் இன்றி இராணுவத் தளபதிக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. அவருக்கு மட்டுமல்ல அவரின் குடும்பத்தினரும் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. போருக்குப் பங்களிப்பு வழங்கிய சவேந்திர சில்வாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனில், அவரின் குடும்பத்தினருக்கு எப்படித் தடைவிதிக்க முடியும்?

இந்த விடயத்திலுள்ள மனித உரிமைத் தத்துவம் தான் என்ன? போருக்கு எந்தவிதப் பங்களிப்பும் வழங்காத சவேந்திர சில்வாவுடைய குடும்ப உறுப்பினர்களின் மனித உரிமை மீறப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியது யார்? இது பாரதூரமான விடயம்.

இந்த விடயத்தில் அமெரிக்காவே மனித உரிமையை மீறியுள்ளது. மனித உரிமை மீறல் தொடர்பில் அந்த நாடு தவறான முடிவு எடுத்துள்ளது.

எனவே, அமெரிக்காவின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கைகள் தொடர்பில் எமக்குச் சந்தேகம் எழுகின்றது. இலங்கையின் இறையாண்மையில் தலையிடும் அதிகாரம் அமெரிக்காவுக்குக் கிடையாது.

எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கவில்லை. அதற்கு எதிராகவே அமைச்சரவையில் குரல் கொடுத்தார். தற்போதைய இராணுவத் தளபதியையும் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவரே நியமித்தார். இதன்போது இந்த நியமனத்தை வழங்க வேண்டாம் என்று அமெரிக்கத் தூதுவர் அழுத்தம் கொடுத்தார். அதனை அவர் கவனத்தில் எடுக்கவில்லை.

**ஜெனிவா தீர்மானம்**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது 2015, 2016 ஆம் ஆண்டுகளில் இணை அனுசரணை வழங்கப்பட்ட இரண்டு தீர்மானங்களிலிருந்து விலகுவது தொடர்பில் அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. நாடாளுமன்றிலோ, அமைச்சரவையிலோ எவ்வித அனுமதியுமின்றி அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தன்னிச்சையாகவே இந்த முடிவை எடுத்தார். அமைச்சரவையில் இதற்கும் நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். என்று மேலும் தெரிவித்தார். (த-44)

# புலிகளின்...

லில் செல்வாக்குச் செலுத்துகின்றார்கள். அரசியல் தீர்வு குறித்து அரசுக்கு இவர்களால் அழுத்தம் பிரயோகிக்கவே முடியாது." என்று கூறியுள்ளார். அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் மற்றும் தொடர்பாடல் இராஜாங்க அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன.

அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிப் பீடம் ஏறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஊடக அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு எந்த இன மக்களுக்கும் முரண்பாடு ஏற்படாத வகையிலேயே தீர்வுகளை நாம் வழங்குவோம். சாய்ந்தமருது நகர சபையும் அவ்வாறே உருவாக்கப்பட்டுள்ளது. எந்த இனத்தவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே இந்தத் தீர்மானத்தை அரசு எடுத்தது. எனவே, அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வுகளை மாத்திரமே எம்மால் வழங்க முடியும். நாட்டில் மீண்டும் இன வன்முறை ஏற்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரும்புகின்ற தீர்வுகளை எம்மால் வழங்க முடியாது" என்றார். (த -22)

# மாணவர்களுக்கு...

யாழ்ப்பாணம், பெப்.19

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து, போதைப் பொருள் கலக்கப்பட்ட இனிப்புப் பாக்கு விற்பனைசெய்யப்பட்டு வந்தமை யாழ்ப்பாண நகரை அண்மித்த பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வர்த்தக நிலையத்தில் மீட்கப்பட்ட இனிப்புப் பாக்கில் போதைப் பொருள் கலக்கப்பட்டுள்ளமையை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதி செய்துள்ளது. இதனையடுத்து அந்த வர்த்தகர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். இவ்வாறு மாணவர்களுக்கே தெரியாமல் போதைப் பொருள் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தமையை அறிந்த பெற்றோர் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் கலந்த பாக்கு மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலின்படி சுகாதாரப் பிரிவினர் குறித்த பகுதியில் திடீர்ப் சோதனையில் குதித்தனர்.

சந்தேகத்துக்கிடமான வர்த்தக நிலையத்தை முற்றுகையிட்டு சோதனையிட்டனர். அங்கு மாணவர்களுக்கு விற்பனைசெய்யப்பட்டுக்கொண்டிருந்த இனிப்புப் பாக்குகளை சுகாதாரப்பகுதியினர் மீட்டனர். குறித்த வர்த்தக நிலையஉரிமையாளரையும் சுகாதாரப் பிரிவினர் நீதிமன்றில் முற்படுத்தினர். சான்றுப்பொருளான இனிப்பு பாக்கில் போதைப் பொருள் கலக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய அதனை அரச பகுப்பாய்வுக்கு அனுப்புமாறு யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்று பணித்தது. அதன்படி அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அது அனுப்பப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்றது. அதில், இனிப்புப் பாக்கில் போதைப் பொருள் கலந்துள்ளது என்பதை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதிசெய்துள்ளது என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

அதையடுத்து அந்த வர்த்தக நிலைய உரிமையாளர் மீதான வழக்கு விசாரணைக்கு வரவுள்ளது. அதற்காக வழக்கு எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு போதையை ஊட்டவல்ல பொருள்கள் இனிப்புப் பொருள்களில் கலக்கப்பட்டு மாணவர்களுக்கே விற்பனை செய்யப்படுகின்றன என்று பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். இதேவேளை பாடசாலை வளாகத்தில் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை போன்ற நடவடிக்கை இடம்பெற்றால் பொலிஸ் திணைக்களத்துக்கு தகவல் வழங்குவதற்கு 0777 128 128 என்ற துரித தொலை பேசி இலக்கம் நேற்று பொலிஸ் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-17)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.19
மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் மறைச்சாட்சி அணியை எதிர்த்து எஸ்.எல்.எவ். அணி மோதவுள்ளது.(23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.19
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.ஜேம்ஸ் விளையாட்டுக கழக அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செல்சிற்றி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் இன்று இரவு7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திருக்குடும்பம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



கூடைப்பந்தாட்டத்தில்

# கொக்குவில் இந்து இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.19
252ஆவது இரணுவ படைப் பிரிவினாரால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும் 20 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப் பந்தாட்டத்திடலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 62:49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது. (23)

லாரியஸ் விருது:

# சிறந்த விளையாட்டு வீரர் ஹாமில்டன், மெஸ்ஸி

20 ஆண்டுகால லாரியஸ் விருது வரலாற்றில் முதல் முறையாக சிறந்த விளையாட்டு வீரர் விருதை இரண்டு வீரர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர். பார்முலா -1 வீரர் லூயிஸ் ஹாமில்டன், ஆர்ஜெண்டினா கால்பந்து நட்சத்திர வீரர் லியோனல்



மெஸ்ஸி ஆகிய இருவரும் உலகின் சிறந்த விளையாட்டு வீரருக்கான மதிப்பு மிக்க லாரியஸ் விருதை பகிர்ந்து கொண்டனர்.
பேர்லினில் நடைபெற்ற விழாவில் 6 முறை பார்முலா -1 சம்பியன் பட்டம் வென்ற லூயிஸ் ஹாமில்டன், 6 முறை ஃபீபா சிறந்த கால்பந்து விருது வென்ற மெஸ்ஸி இருவருக்குமிடையே விருதை வெல்வதில் கடும் போட்டி நிலவியது. வாக்களிப்பு இருவருக்கும் சரிசமமாக விழுந்து சமநிலையானது. இதனால் இருவருக்குமான விருது பகிர்ந்தளிக்கப்பட்டது. இருபது ஆண்டுகால லாரியஸ் விருது வரலாற்றில் முதல் முறையாக உயரிய விருது இரு வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது இதுவே முதன் முறை.
கால்ஃப் நட்சத்திரம் டைகர் உட்ஸ், கென்யாவின் மரத்தான் மேதை எலியுட் கிப்சோக், டென்னிஸ் லெஜண்ட் ரபேல் நடால், மோட்டோ ஜிபி வீரர் மார்க் மார்க்வேஸ் ஆகியோரைக் கடந்து மெஸ்ஸி, ஹாமில்டன் லாரியஸ் உயரிய விருதை வென்றனர்.

# ஹொக்கிப் போட்டி பிற்போடல்

யாழ்ப்பாணம், பெப்.19
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா சங்கத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 23ஆம் திகதி நடைபெறவிருந்த அமரர் கந்தையா வேலாயுதப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ஹொக்கிப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் 29ஆம்,1ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
எனவே போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழக்கள் தங்களது பதிவை 27ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர் யாழ்.மாவட்ட ஹொக்கி சுற்றுப்போட்டி பணிப்பாளர் பா. நேசறூபனிடம் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என போட்டி ஏற்பாட்டளர்கள் அறிவித்துள்ளனர். (23)

# லாரிஸ் விருது வார்த்தைகளால் விவரிக்கமுடியாது

## சச்சின் நெகிழ்ச்சி

விளையாட்டுத் துறையை பொறுத்தவரை மிக முக்கிய விருதாகக் கருதப்படுவது லாரியஸ் விருதாகும். இந்த நிலையில், 2019 ஆம் ஆண்டுக்கான லாரியஸ் விருதுகள் வழங்கும் விழா ஜேர்மன் தலைநகர் பேர்லினில் நடைபெற்றது.
கடந்த 20 ஆண்டுகளில் விளையாட்டு உலகின் சிறந்த தருணமாக, இந்திய கிரிக்கெட் அணியின் சச்சின் டெண்டுல்கரை, 2011ஆம் ஆண்டு உலக கோப்பை இறுதி ஆட்டத்தில் வென்ற பின், வீரர்கள் தோளில் சுமந்து சென்ற நிகழ்வு அதிக வாக்குகள் பெற்று தெரிவானது. அந்த வகையில் இதற்கான விருதை சச்சின் பெற்றுக் கொண்டார். ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்டீவ் வாக் இந்த விருதை சச்சினுக்கு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.
விருது பெற்ற பின் சச்சின் தெரிவிக்கையில்;
இது மிகவும் சிறப்பு மிக்கது. உலக கோப்பையை வென்ற போது இருந்த உணர்வுகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஒட்டு மொத்த நாடும் அந்தத் தருணத்தை கொண்டாடியது இதை யிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன்- என்றார்.



அரச தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெறக்கூடிய புதிய கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன.

Pre School Teachers Training முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NVQ) Level-4

- A/L தகமை இல்லாதவர்களும் இக் கற்கை நெறியை கற்க முடியும்.
- 6 மாத கால கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு (TVEC) யின் அரச அங்கீகாரம் பெற்ற Pebbles Academy யினால் NVQ-4 சான்றிதழ் வழங்கப்படும்.
- அத்தோடு ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய 3 மாத கால கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன.

• Spoken English • Spoken Singhala & Grammar

- இக் கற்கை நெறியினை யாவரும் கற்க முடியும்.

▸ இக் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் 2020.02.23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30.am மணிக்கு யாழ்ப்பாண பொது நூலகத்தில் ஆரம்பமாகின்றன.
▸ இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்க விரும்பினால் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
Pebbles academy
Jaffna +94 77 5697715 / +94 77 1779 170
Head Office +94750847474/+94 6749 29229
www.pebbles.academy / Email: info@pebbles.academy
Facebook page: Pebbles Academy
Address: Technical College Road, Akkaraipattu.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.